## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் - 2019

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (கூட்டுத்தாபனம்) மற்றும் சீபிசீ இனதும் அதன் துணைக் கம்பனியினதும் (தொகுதி) இன் 2019 திசெம்பர்31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று,உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்கள்இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதியினுடைய தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதியினுடைய நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிகூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாரள்களினுடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம்மற்றும் தொகுதி இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதி வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) எல்கேஏஎஸ் 16 இன் பந்தி 36 - ஆதனம் பொறி மற்றும் உபகரணம் :** | | |
| கூட்டுத்தாபனத்தால் முழுமையாக பெறுமானத்தேய்வடைந்த அண்ணளவாக ரூபா 5,098.89 மில்லியன் கிரயமான சொத்துக்களின் ஆயட்காலம் தொடர்ச்சியாக மீள்மதிப்பீடு செய்யப்படாமல் | 11 காணிகளுக்குரிய உண்மையான உரிமை கொண்டிருந்திருக்காமையினால் மறுமதீப்பீட்டு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இது நியமத்தை பின்பற்றவேண்டும் மற்றும் பொருத்தமான பதிவுகள் பேணப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உபபோகிப்பதுடன் அவைகள் கணக்கிப்படுகின்றன. மேலும்,மாதிரி பரீட்சிப்பில் வெளிப்பட்டதன்படி மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தாபனத்தின் 22 நிலங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை மற்றும் இது கணிசமான குறைந்தளவு தொகையை காட்டுகின்றது. | ஆனால் சட்ட நடவடிக்கைகளின் மூலம் இக் காணிகளின் உரிமையை தெளிவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இக் காணிகளின் உரிமைத்தன்மை தெளிவாக்கப்பட்ட பின்னர் மறுமதீப்பீடு குறித்து கணக்குகளில் சீர் செய்யப்படும். | |
| (ஆ) இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 16, இன் 47 வது பந்தியின்படி நிறுவனங்களானவை எல்லா குத்தகைகளுக்கும் ஒற்றைக் கணக்கீட்டு மாதிரியைப் பின்பற்ற தேவைப்படுத்தப்படுகின்றன. நிறுவனமானது செயற்பாட்டில் இருக்கும் குத்தகையை இருப்புநிலைக் குறிப்பில் ஏனைய சொத்துக்களிலிருந்து வேறாகப் பயன்படுத்தும் உரிமையாக அல்லது வேறாகக் குறிப்புகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். அதே போன்று குத்தகைப் பொறுப்புக்களானவை இருப்புநிலைக் குறிப்பில் ஏனைய சொத்துக்களிலிருந்து வேறாகப் பயன்படுத்தப்படும் உரிமையாக அல்லது வேறாக குறிப்புகளில் வெளியிடப்பட வேண்டும். எவ்வாறிருப்பினும், கூட்டுத்தாபனமானது அத்தகைய ஏற்பாடுகளுடன் இணங்கவில்லை. கணக்காய்வுக்கு வழங்கப்பட்ட தகவலின் படி 2019 ஆம் ஆண்டிற்கான மொத்த செயற்பாட்டுக் குத்தகை வாடகைச் செலவானது ரூபா 43.12 மில்லியன் ஆகும். | சிபிசி ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தொடர்பாக நிதிக்குத்தகையை கொண்டிருக்கவில்லை. எனவே நிதிக்கூற்றுக்களில் எவ்வித மாற்றங்களும் இல்லை. எவ்வாறாயினும் இனிவரும் நிதிக்கூற்றுக்களில் ஆண்டுக்கு செலுத்தப்பட்ட குத்தகை வாடகையை வெளிக்காட்ட நடவடிக்கை எடுக்கப்படும். | இது நியமத்தை பின்பற்றவேண்டும் மற்றும் பொருத்தமான பதிவுகள் பேணவேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக்குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கூட்டுத்தாபனத்தின் ஒன்றிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் படி கம்பனிக்கு இடையில் நீக்கப்பட்ட மீதியானது ரூபா 3,845.56 மில்லியன் எனப்பட்டது. அதே நேரம் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் இது ரூபா 6,248.78 மில்லியன் இருந்தது. எனவே ஒன்றிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் வர்த்தகம் மற்றும் ஏனைய பெறுவனவுகள் கீழ் கூட்டுத்தாபனத்தில் இருந்து ரூபா 2,403.22 மில்லியன் இணக்கமற்ற வித்தியாசம் குறிப்பிடப்பட்டது. மேலும், இத்தகைய இணக்கமற்ற மீதியானது கண்காணிப்பின் கீழான வருட இறுதியில் ரூபா 1,029.13 மில்லியன் சீரமைக்கப்படாத வழியில் காசையும் உள்ளடக்குகின்றது. | - | இணக்கம் செய்யப்படாத அனைத்து மீதிகளையும் முன்கூட்டியே தீர்வு செய்ய பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| (ஆ) துணை கம்பனியின் (CPSTL) நிதிச் சொத்துகள் மற்றும் நிர்வாக செலவுகள் ரூபா 9.78 மில்லியனாலும், பிற்போடப்பட்ட வரி ரூபா 2.74 மில்லியனாலும், வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் ரூபா 54.97 மில்லியனாலும், ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 76.35 மில்லியனாலும் மற்றும் வருமான வரிச் செலவு ரூபா 24.12 மில்லியனாலும் முறையே ஒன்றிணைக்கப்பட்ட நிதிக் கூற்று மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதி கூற்று என்பவற்றுக்கிடையில் காட்டப்பட்ட தொகையில் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. | - | இணக்கம் செய்யப்படாத அனைத்து மீதிகளையும் தீர்வு செய்ய பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் மற்றும் ஒன்றிணைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும்போது சரியான தொகைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு ஏற்ப "வெளிநாட்டு நாணய அலகுகளில் குறிப்பிடப்பட்டிருந்த நாணயச் சொத்துக்களானவை அறிக்கையிடும் போது நடைமுறையிலிருந்த நாணய மாற்று விகிதத்திற்கு மாற்றப்பட்டது. மற்றும் எல்லா வேறுபாடுகளும் வருமானக் கூற்றுக்கு எடுக்கப்பட்டது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வருமானத்துறையின் எல்லா வாடிக்கையாளர்களும் வெளிநாட்டு நாணய அலகுகளிலேயே குறிப்பிடப்பட்டிருந்தனர்." என குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும் வெளிநாட்டு நாணய அலகுகளில் குறிப்பிடப்பட்டிருந்த நாணயச் சொத்துக்களானவை அறிகக்யிடும் போது நடைமுறையில் இருந்த நாணயமாற்று விகிதத்திற்கு மாற்றப்படவிலல்லை. அதன் விளைவாக மொத்தமாக ரூபா 910.8 மில்லியன் இருந்த குறிப்பிட்ட சில விமானத்துறை வாடிக்கையாளர்கள் மீதியானது குறை மதிப்பீடு செய்யப்பட்டதோடு மீளாய்வின் கீழான வருடத்திற்கான வருமானமானது அதே தொகையாகவே அவதானிக்கப்பட்டது. | சிபிசியின் கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம், அமெரிக்க டொலரை (செயற்பாட்டு நாணயம்)ரூபாய் விதிமுறைகளாக (அறிக்கையிடும் நாணயம்) மாற்ற ஆண்டிறுதியின் இறுதி திகதியிலுள்ள பரிமாற்ற வீதம் கருத்தில் கொள்ளப்பட்டது. ஆனால் விற்பனை விகிதத்தை இறுதி திகதியாக உபயோகிப்பதனால் ரூபா 910.8 மில்லியன் வித்தியாசம் ஏற்ப்பட்டது | இது கூட்டுத்தாபனத்தினுடைய கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கணக்கீட்டு கொள்கையினை இணக்கப்பட வேண்டும். |
| (ஈ) **மாதாந்த பயன்பாட்டுக் கட்டணம் (MUF)** | | |
| 2013 ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதிய 38/1140 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் படி, 2014 ஜனவரி முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் கூட்டுத்தாபனத்திற்கு உரிமையான எல்லா வணிக விற்பனையாளர் செயற்பாட்டு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் (CODO) மற்றும் திறைசேரிக்குச் உரிமையான எல்லா விற்பனை செயற்பாட்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களிடமிருந்தும் (TODO) மாதாந்த | அனைத்து கோடோ விற்பனையாளர்களிடமும் இந்த கொள்கையை நடைமுறைப்படுத்த 2020 ஆம் ஆண்டு யூலை 03 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 3/1214 சபைத்தாள் 2018 ஆம் ஆண்டில் சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் சிபிசியின் இயக்குனர்கள் சபை சந்தைப்படுத்தல் கருத்துரைகளுடன் உடன்படவில்லை | பொறுப்பான தரப்பினரிடமிருந்து நட்டத்தை மீளப்பெற பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். சபையின் தீர்மானங்கள் பொறுப்பான தரப்பினரினால் திட்டமிட்ட முறையில் செயற்படுத்துவதனை உறுதிப்படுத்தவேண்டும் இல்லையென்றால் |

| | | |
|---|---|---|
| பயன்பாட்டு கட்டணத்தை (MUF) அறவிடுவதற்கு சபையானது அனுமதி அளித்திருக்கிறது. எவ்வாறிருப்பினும், இத் தீர்மானமானது முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதோடு 248 விற்பனை நிலையங்களுள் 11 நிலையங்களிடமிருந்து மாத்திரமே மாதாந்த பயன்பாட்டுக் கட்டணம் அறவிடப்பட்டது. அதன்படி 2014 முதல் 2019 ஆண்டு வரையான காலப்பகுதியில் கூட்டுத்தாபனமானது அண்ணளவாக ரூபா 1,900 மில்லியன் ஒட்டுமொத்த நட்டத்திற்கு உள்ளாகியது. இவ்விடயமானது எனது முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் வலியுறுத்தப்பட்ட போதிலும் மேற்குறிப்பிடப்பட்ட இரு பிரிவுகளிலும் உள்ள எல்லா விற்பனையாளர்களிடமிருந்தும் மாதாந்தப் பயன்பாட்டுக் கட்டணத்தை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனத்தினால் வினைத்திறனான நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், இது தொடர்பாக மீளாய்வின் கீழ் உள்ள இவ்வருடத்தின் நிதிக் கூற்றுக்களில் ஏதேனும் மாற்றங்கள் மேற்கொள்ளப்படவில்லை. | மற்றும் முன்னைய தீர்மானத்தின் தெளிவற்ற தன்மை மற்றும் முரண்பாடான தன்மையை காரணம் காட்டி இக் கொடுப்பனவுகள் தொடர்பான அனைத்து தீர்மானங்களையும் நீக்கியது. இந்த அனைத்து தீர்மானங்களையும் நீக்கும்போது வெளி மதிப்பீட்டிற்கு பின்னர் கோடே விற்பனை நிலையத்திடமிருந்து மேலதிக கட்டணத்தை மாற்ற மாற்று பொறிமுறையை அவர்கள் பரிந்துரைத்துள்ளார்கள். புதிய முறைமையும் நடைமுறைப்படுத்த கடினமாக இருந்தது. ஆகவே 2020 வருடத்தில் புதிய தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சிரமங்களுக்கான காரணங்களை சுட்டிக்காட்டி ஒரு புதிய சபைத்தாள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது, சபைத்தாளின் தீர்மானம் எம்யூஎப் இல் எவ்வித உறுதியான அடிப்படையையும் நடைமுறைப்படுத்தவில்லை என்பதனை ஒப்புக்கொண்டது. சீபிசீயால் எடுத்த கொள்கை தீர்மானங்களின் அடிப்படையில் இது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |
| (உ) ரூபா 1,941.76 மில்லியன் கூட்டுத்தொகையாகக் கொண்ட மூன்று எதிர்மறை வங்கிக் கணக்கு மீதிகளானவை நேர்வங்கிக் கணக்கு மீதிகளுக்கு எதிராக நிராகரிக்கப்பட்டதோடு நடைமுறைப் பொறுப்புக்களிற்கு கீழ் காட்டப்படுவதற்குப் பதிலாக நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் சிபீசி வங்கி மேலதிக பற்றை கொண்டிருக்கவில்லை. வட்டி விளைவிக்கும் முதலீடுகளில் தினசரி மேலதிகமான பணத்தை முதலீடு செய்ய சீபீசி இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியில் பண சந்தை கணக்குகளை திறந்துள்ளது. இப் பணச்சந்தை கணக்குகள் வேறு நடைமுறைகணக்குகளுடன் இணைக்கப்பட்டுள்ளது நடைமுறைக்கணக்கில் பணம் கிடைக்கவில்லையென்றால், தேவையான தொகை தானாகவே நடைமுறைக்கணக்கிற்கு பணச்சந்தை கணக்கிலிருந்து பரிமாற்றப்படும். இதன் பிரகாரம் பணச்சந்தை கணக்கில் நிதி கிடைப்பதால் வங்கி கணக்குகளில் வங்கி மேலதிகபற்று எதுவும் இல்லை. மேலும் 2019 காலப்பகுதியில் எந்தவொரு வங்கிமேலதிகபற்று வட்டியும் ஈடுசெய்யப்படவில்லை | நிதிக்கூற்றுக்களில் நேர் மற்றும் எதிர் மறையான வங்கி மீதிகள் தனியாக காட்டப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா மில்லியன் | தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் ரூபா மில்லியன் | வேறுபாடு ரூபா மில்லியன் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) இலங்கை மின்சார சபையிடமிருந்து பெறவேண்டியவைகள் | 785.3 | 753.6 | 31.78 | சீஈபியிலிந்து பெறப்பட்ட மீதி உறுதிப்படுத்தல்களின் பிரகாரம் சீபிசீ க்கு செலுத்த வேண்டிய ரூபா 753.6 மில்லியன் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ள இணக்கக்கூற்று தாளில் வித்தியாசம் ரூபா 31.8 மில்லியன் விளக்கப்பட்டுள்ளது | இணக்கப்படாத மீதிகளை சீர்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் |
| (ஆ) இலங்கை வருமான வரித்திணைக்களத்திற்கு செலுத்தவேண்டியவைகள் | | | | | |
| (i) தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரிகள் | 3.242.5 | 707.9 | 2,534.6 | சில கொடுப்பனவுகள் / சீர்செய்தல் விடயங்களை கருத்தில் கொள்ளாமல் நிலுவைத் தொகையை ஐஆர்டீ உறுதிப்படுத்தியதால்சீபிசீ மற்றும் ஐஆர்டீக்கு அடையிலான வேறுபாடு எழுந்துள்ளது. | நிலுவைத்தொகையை முன்கூட்டியே தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) வருமான வரி | 2,950.8 | 16,268 | 13,317.2 | | |
| (iii) உழைக்கும் போதான வரி | 0 | 33.5 | 33.5 | ரூபா 51,644,826.99 ஆண்டுக்கான உபகாரப்பணம் மற்றும் திசெம்பர் மாத சம்பளதிற்கான உழைக்கும் போதான வரி இலங்கை வருமான வரித்திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டது. இது 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் செலுத்த வேண்டியவைகள் 2020 ஆம் ஆண்டு சனவரி 13 ஆம் திகதியில் செலுத்தப் பட்டது.<br><br>ஓய்வுதிய பணித்கொடைக்கான நிறுத்திவைக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரி ரூபா 2.5 மில்லியனை பிரதிபலிக்கின்றது. இது உள்நாட்டு இறைவரித்திணைக்களத்திக்கு அல்லது பணியாளருக்கு செலுத்தப்படும். உள்நாட்டு | நிலுவைத்தொகையை முன்கூட்டியே தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | இறைவரித்திணைக்களத்திடமிருந்து அனுமதி பெறும் வரை சீபீசீ பணிக்கொடையின் ஒரு பகுதியை நிறுத்தி வைத்திருந்தது. அனுமதி எடுத்தவுடன் இந்த பொறுப்பு தீர்க்கப்படும். | |
| (இ) செலுத்தவேண்டிய தாமதக் கட்டணம் | 337.24 | 363.12 | 25.89 | கருத்துரை இல்லை | நிலுவைத் தொகையை முன்கூட்டியே தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் |

### 1.5.4 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டிற்கான ரூபா 11,85.6 மில்லியன் வரிக்கு பின்னரான நட்டம் மற்றும் ரூபா 11,751 மில்லியன் முற்றும் உள்ளடக்கிய செலவிற்கும் பின்னர் கூட்டுதத்தாபனத்தின் செயற்பாடுகளானவை மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 293,213 மில்லியன் எதிர்மறை நிகர சொத்து நிலையைக் கொண்டிருந்தது. பிரதானமாக அண்மைக் காலத்தில் இருந்த தொடர்ச்சியான நாணயமாற்று விகித வேறுபாடுகளின் எதிர்மறைத் தாக்கத்தின் காரணமாக இப் பாரிய இழப்புகள் ஏற்பட்டன. பொருத்தமற்ற விலையிடும் கொள்கை மற்றும் முன்னைய வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட இடர் குறைப்பு பரிமாற்றங்கள் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட பாரிய நட்டத்தின் எதிர்மறைத் தாக்கங்கள் மேலும், கூட்டுத்தாபனத்தின் நிகர சொத்துக்களுக்கு தேய்மானத்தை ஏற்படுத்தியது. இவ்வாறு அரசாங்கத்தின் நிதி உதவி இல்லாமல் கூட்டுத்தாபனத்தை தொடர்ந்தியங்கும் தன்மையை கொண்டு நடத்துகின்ற இயலுமை சந்தேகத்திற்குரியது ஆகும். | கருத்துரை இல்லை | கூட்டுத்தாபனத்தின் எதிர்மறை சொத்துகளை குறைக்க சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

### 1.5.5 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| கிடைக்கப்பெற்ற விடயம் | தொகை ரூபா மில்லியன் | இல்லாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை இறைவரி மற்றும் இலங்கை சுங்கத்திடமிருந்து பெற வேண்டியவைகள் | 1,135.8 | வரிவிபரத்திரட்டு, பட்டியல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய ஆவணங்கள் | இந்த தொகையை மீளப்பெற்றுகொள்வது சரி பார்க்கப்பட்டு 2020 ஆம் நிதியாண்டிற்கான நிதிக்கூற்றில் அவசியமான பதிவுகள் போடப்பட்டுள்ளன | தொகையை தீர்க்க / மீளப்பெற உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் |
| (ஆ) உரிமைச் சொத்து | 1.02 | சொத்துக்கள் விபர அட்டவணை மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய ஆவணங்கள் | இது கூட்டிணைக்கப்பட்ட காலப்பகுதியில் எண்ணெய் கம்பனிகளிடமிருந்து வழங்கப்பட்ட நிலையான சொத்துக்களின் மதிப்பு | கூட்டுத்தாபனத்தினுடைய சொத்து பற்றிய தகவல்களை வைத்திருக்க பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |
| (இ) செலுத்த வேண்டிய மீதிகள் | 317.37 | மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய ஆவணங்கள் | 2020 ஆம் நிதியாண்டில் சரியான சிலுவைகளை பிரதிபலிக்க இந்த நிலுவைகளுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன | கொடுக்கல் வாங்கல்களின் இற்றைப்படுத்தப்பட்ட் மற்றும் சரியான தகவல்களை வைத்திருக்க பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் |
| (ஈ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெறுமதிசேர் வரி தொடர்பாக பெறவேண்டியவைகள் | 565.2 | வரிவிபரத்திரட்டு, பட்டியல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய ஆவணங்கள் | இந்த தொகையை மீளப்பெற்றுகொள்வது சரி பார்க்கப்பட்டு 2020 ஆம் நிதியாண்டிற்கான நிதிக்கூற்றில் அவசியமான பதிவுகள் போடப்பட்டுள்ளன | கொடுக்கல் வாங்கல்களின் இற்றைப்படுத்தப்பட்ட் மற்றும் சரியான தகவல்களை வைத்திருக்க பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் |
| (உ) உள்நாட்டு இறை வரித்திணைக்களத்திடம் இருந்து பெறவேண்டியவைகள் | 376 | வரிவிபரத்திரட்டு, பட்டியல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய ஆவணங்கள் | 1998 இல் இந்த பதிவு பதிவுசெய்யப்பட்டது மற்றும் இணக்கங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கி ன்றது | கொடுக்கல் வாங்கல்களின் இற்றைப்படுத்தப்பட்ட் மற்றும் சரியான தகவல்களை வைத்திருக்க பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் |
| (ஊ) வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளின் வரவு மீதிகள் | 749.66 | மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட ஏனைய ஆவணங்கள் | 2020 ஆம் நிதியாண்டில் சரியான சிலுவைகளை பிரதிபலிக்க இந்த நிலுவைகளுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன | கொடுக்கல் வாங்கல்களின் இற்றைப்படுத்தப்பட்ட மற்றும் சரியான தகவல்களை வைத்திருக்க பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் |
| (எ) வழியில் சரக்கு மற்றும் வழியில் காசு | 8.46 | உறுதிப்படுத்தல் மீதிகளுடன் தொடர்புபட்ட ஆவணங்கள் | சீபிசீ மீதிகளை இணக்கும் செயற்பாட்டில் உள்ளது மற்றும் தேவையான நடவடிக்கைகளுடன் உரிய காரணத்தை இல்லாமல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் | கொடுக்கல் வாங்கல்களின் இற்றைப்படுத்தப்பட்ட மற்றும் சரியான தகவல்களை வைத்திருக்க பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் |
| (ஏ) முற்பண கொடுப்பனவுகளின் செலவு மீதி | 32.82 | உறுதிப்படுத்தல் மீதிகளுடன் தொடர்புபட்ட ஆவணங்கள் | தொடர்புடைய கருத்து எதுவும் வழங்கப்படவில்லை. | தொகையை சீர் செய்ய நடவடிக்கை டுெக்கப்படவேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஐ) முற்பண கொடுப்பனவுகளின் வரவு மீதி | 1.02 | நிலுவையிலுள்ள நீதி மன்ற வழக்குகள் அல்லது இல்லாத வழக்குகள் தொடர்பான தகவல் கிடைக்ககூடியதாகவில்லை | தொடர்புடைய கருத்து எதுவும் வழங்கப்படவில்லை. | கொடுக்கல் வாங்கல்களின் இற்றைப்படுத்தப்பட்ட மற்றும் சரியான தகவல்களை வைத்திருக்க பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஒ) மீளளிக்க கூடிய வைப்புக்கள் | 110.8 | உறுதிப்படுத்தல் மீதிகளுடன் தொடர்புபட்ட ஆவணங்கள் | வாடிக்கையாளரால் பணத்தை மீளப்பெறும் வரை இத் தொகையின் சில வைப்புக்கள் தொடர்கின்றன. | கொடுக்கல் வாங்கல்களின் இற்றைப்படுத்தப்பட்ட மற்றும் சரியான தகவல்களை வைத்திருக்க பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 1.5.6 துணைக்கம்பனியின் நிதிகூற்று மீதான கணக்காய்வு அபிப்பிராயம்

மீளாய்வு வருடத்திற்கான வரையறுக்கப்பட்ட சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேச் ரேமினலின் நிதிசார் கூற்றுக்கள், கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதியின் தொடர்புபட்ட நிலுவைகள் / பரிவரிதனைகள் என்பவற்றுடன் ஓர் இணக்கமின்மையை ஏற்படுத்தும் என்பதனால் பின்வரும் விடயங்கள் காரணமாக என்னால் அவற்றுக்கு உரிமை மறுக்கப்பட்டது.

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஆதனம், பொறி மற்றும் இயந்திரம் மீதான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 51 ஆம் பந்தியின் படி, ஆதனம், பொறி மற்றும் உபகரணம் (இ.க.நி - 16) சொத்துக்களின் பயன்பாட்டு ஆயட்காலமானது குறைந்தது ஒவ்வொரு நிதி வருடத்தின் இறுதியிலும் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்பதோடு எதிர்பார்ப்புகளானவை முன்னைய மதிப்பீடுகளில் இருந்து வேறுபடும் போது மாற்றங்களானவை இ.க.நி – 8 இற்கு ஏற்ப கணக்கிடப்பட வேண்டும். எவ்வாறிருப்பினும் ரூபா 6,074 மில்லியன் பெறுமதியான முழுமையாகவும் தொடர்ச்சியாகவும் கம்பனியினால் பயன்படுத்தப்பட்டு வந்த சேதமடைந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆயட்காலமானது அதற்கு ஏற்ப மீளாய்வு செய்யப்படவும் இல்லை கணக்கிடப்படவும் இல்லை. மேலும், கம்பனியானது 2003 ஆம் ஆண்டின் போதான அதன் ஆரம்பத்தில் இருந்து இன்று வரை மீள்மதிப்பீடு செய்யப்படவில்லை. | சிஏஎஸ்எல் ஆதரவுடன் பூச்சிய பெறுமதி சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்ய உடன்பட்டது. | கம்பனி நியமத்தின் தேவைக்கு இணங்க வேண்டும் மற்றும் அதற்கேற்ப சொத்துக்கள் மறுமதிப்பீடு செய்யப்படும் |
| **(ஆ) கம்பனிக்கு இடையிலான நிலுவைகள்**<br><br>இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்திற்கும் (CPC) லங்கா இந்தியன் ஒயில் கம்பனிக்கும் (LIOC) இடையிலான நிலுவைகளின் துல்லியத்தன்மை, உளதாம்தன்மை, மதிப்பீடு மற்றும் முழுமைத்தன்மை ஆகியவற்றின் காரணமாக உறுதிப்படுத்தப்படவில்லை. | | |

| | | |
|---|---|---|
| (i) கணக்காய்வுக்குக் கிடைக்கக்கூடிய தகவலின் படி, 2018 ஆம் ஆண்டில் எக்சிம் வங்கிக் கடனைத் தீர்ப்பதைக் கவனத்திற் கொண்டு ஒரு லீற்றருக்கு 13 சதம் என்ற வெளியீட்டு கட்டணக் கடனின் வட்டிக் பகுதியை நீக்குவதற்கு அவர்களது கணக்கிலிருந்து பிரதான நிறுவனமான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 1,173 மில்லியன் கிடைக்கக்கூடிய தொகையாக எழுதப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும், இது தொடர்பாக கம்பனியால் பெறுமதியிழப்பு ஏற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை அல்லது தீர்மானிக்கப்படவில்லை. எனவே இந்த பெறவேண்டிய மீதிகளின் மீள்பெறுகை கணக்காய்வில் சந்தேகத்திற்குரியது ஆகும். | தற்போதுள்ள முத்தரப்பு ஒப்பந்தத்தை கருத்தில் கொள்ளாமலும் சிபிசிஎஸ்ரிலினுடைய பணிப்பாளர் சபைக்கு அறிவிக்காமலும் செயல்திறன் கட்டணங்களிலும் வட்டி கூறுகளை அகற்றுவதற்காக சிபிசி அவற்றை பதிவழித்திருந்தது. சிபிசியின் செயல்திறன் கட்டணங்களின் வட்டி கூறுகளை அகற்றுவதற்கான முடிவு தன்னிச்சையாக சிபிசியினால் சீபிஎஸ்ரிஎல் இன் முகாமைத்துவத்தினை கருத்திற்கொள்ளாமல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>சீபிஎஸ்டிஎல் / சீபிசீ சபை உறுப்பினர்கள் பங்களிப்புடன் இவ் விவகாரத்தை தீர்ப்பதற்கு இரண்டு முகாமைத்துவதிற்குமிடையில் (சீபிசீ மற்றும் சீபிஎஸ்டிஎல் நிதிபிரிவு ) பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருந்தன. 2019 டிசம்பர் 31 ஆந் திகதிய நிலவரப்படி மீட்டெடுக்ககூடிய இருப்பு காரணமாக எந்தவொரு குறைபாட்டிற்கும் எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. | சிபிசி மற்றும் எல்ஜஓசியுடன் அத்தகைய கடன் மற்றும் சட்டபூர்வமான தன்மையை கருத்திற்கொண்டு ஓர் தீர்வுக்கு வர வேண்டும். |
| (ii) கம்பனியின் நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் இறுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திலிருந்து பெறவேண்டிய தொகை ரூபா 6,248.87 மில்லியன் ஆகும். எவ்வாறிருப்பினும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் கம்பனிக்கு செலுத்த வேண்டிய தொகை (ரூபா 1,029.45 மில்லியன் வழியில் காசை கழிப்பதற்கு முன்னர்) ரூபா 4,625.74 மில்லியன் ஆகும். இவ்வாறு, இவ்விரு மீதிகளுக்கும் இடையே ரூபா 1,623.13 மில்லியன் இணக்கமற்ற ஒரு வித்தியாசம் காணப்பட்டது. | 31 டிசெம்பர் 2019, உங்கள் வேறுபாடுகளின்படி ரூபா 2,652.58 மில்லியன் சிபிசி மற்றும் சிபிஎஸ்டிஎல் இடையில் வியாபார பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய நிலுவைகள் கூறப்பட்ட காலங்களில் இவ் நிலுவைகளுக்கிடையில் வேறுபாடுகள் இல்லை என்பதனை நாங்கள் அவதானித்தோம் | இணக்கம் செய்யப்படாத அனைத்து மீதிகளையும் முன்கூட்டியே தீர்க்க பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (iii) லங்கா இந்தியன் ஒயில் கம்பனியிலிருந்து பெறப்பட்ட நிலுவை உறுதிப்பாட்டுக்கு அமைய கம்பனிக்குச் செலுத்த வேண்டிய தொகையானது ரூபா 370.9 மில்லியன் ஆகும். அதேவேளை கம்பனியின் நிதிக்கூற்றுகளுக்கு ஏற்ப மொத்தத் தொகையானது ரூபா 376 மில்லியன் ஆகும். இவ்வாறு, இவ்விரு மீதிகளுக்கும் இடையே ரூபா 5.1 மில்லியன் இணககமற்ற ஒரு வித்தியாசம் காணப்பட்டது. | வித்தியாசத்தை இணக்கம்செய்து முடிவுறுத்துவதற்கான விவாதங்கள் நடைபெற்றுவருகின்றன. | இணக்கம் செய்யப்படாத அனைத்து மீதிகளையும் முன்கூட்டியே தீர்க்க பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| (இ) நீண்ட காலமாக குறிப்பிடத்தக்க அளவினைக் கொண்ட 1300 இற்கும் மேற்பட்ட கையிருப்பு பொருள் வகைகள் தொழில் முயற்சி மூலவளத்திட்டமிடல் முறைமைகளுக்கு (ERP) உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. உதாரணமாக கம்பனியின் SAP இணைக் குறிப்பிடலாம். எனவே, மீளாய்வாண்டின் இறுதியில் நிதி நிலவரக்கூற்றில் காட்டப்பட்ட ரூபா 676 மில்லியன் பெறுமதியான கையிருப்புப் பொருட்களின் துல்லியத்தன்மை, மதிப்பீடு மற்றும் பூரணதத்தன்மை ஆகியவை கணக்காய்வில் நம்பமுடியாதுள்ளது. | அகற்ற வேண்டிய மற்றும் பயன்படுத்தப்பட்ட பொருட்களுக்காக தற்போதுள்ள நடைமுறைகளின் படி, (உ+ம்) பழைய செய்தித்தாள்கள், பயன்படுத்தப்பட்ட டயர்கள் போன்றவை) அனைத்து அகற்றப்பட வேண்டிய மற்றும் பயன்படுத்தப்பட்ட பொருட்களையும் பூச்சிய மதிப்புடன் பயன்படுத்தப்பட்ட பொருட்களாக பதிவு செய்வது கட்டாயமாகும். திருட்டைக் குறைப்பதற்கும், கண்டுபிடிப்பதை மேம்படுத்துவதற்கும் இது ஒரு முக்கியமான உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறையாகும். 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதிய நிலவரப்படி, பூச்சிய மதிப்பு உருப்படிகளின் எண்ணிக்கை 1,369 ஆகும். அவற்றில் 1,336 உருப்படிகள் வகை ஒன்று (பயன்படுத்தப்பட்ட உருப்படிகள அ கற்றப்பட வேண்டியவை) மற்றும் 19 உருப்படிகள் மட்டுமே மறுசீரமைக்கப்பட வேண்டும் மற்றும் 14 உருப்படிகள் 3 வது பிரிவின் கீழ் உள்ளன. | அனைத்து இருப்பு உருப்படிகளும் சரியாக மதிப்பிடப்பட்டு அதற்கேற்ப கணக்கிடப்படவேண்டும். கம்பனியின் இருப்புக் கட்டுப்பாட்டின் மீது முறையான பதிவு மற்றும் கட்டுக்காட்டு பொறிமுறையை அறிமுகப்படுத்த வேண்டும். |
| (ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 8 - இற்கு மாறாக மீளாய்வாண்டின் இறுதியில் 2010 முதல் 2014 வரையான காலப்பகுதிக்கு ரூபா 62.5 மில்லியன் தொகையையும் 2014 முதல் 2018 வரையான காலப்பகுதிக்கு ரூபா 225.15 மில்லியன் தொகையும் 2018 ஆம் ஆண்டிற்கு ரூபா 70.1 மில்லியன் மொத்தமாக ரூபா 357.7 மில்லியன் இழுபறி படகுக் கட்டணமாகவும் மீளாய்வாண்டின் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுக்கான ரயில் பாதை பராமரிப்புக் கட்டணமாக மொத்த தொகையாக ரூபா 1.91 மில்லியன் செலவுகளாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன. | புகையிரத பாதை பராமரிப்பு செலவுக்கான சிஜீஆர் மற்றும் சீபிஎஸ்டிஎல் விலைப்பட்டியல் இடையே முறையான ஒப்பந்தம் இல்லாததால் சீபிஎஸ்டிஎலுக்கு அனுப்பப்படவில்லை. சிஜீஆர் உத்தியோகபூர்வமாக கலந்துரையாடிய பின்னர் இரு தரப்பினர்களும் சீபிஎஸ்டிஎல் 2017 மற்றும் 2018 வருடத்திற்கு 2019 இல் தீர்வு காண ஒப்புக்கொண்டது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் புகையிரத பாதை பராமரிப்பு செலவு சரியான காலத்தில் திரட்டப்படும். இலங்கை கணக்கீட்டு நிமங்களின் பிரிவு 25 இன் - எல்கேஏஎஸ் 08 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தவறுகளின் மாற்றங்கள் தற்போதைய காலத்தின் தொடக்கத்தில் முற்றுமுழுதான விளைவை தீர்மானிப்பது நடைமுறைக்கு சாத்தியமற்றதாக இருக்கும்போது அனைவருக்கம் புதிய கணக்கீட்டு கொள்கையை பயன்படுத்துதல் முன்னைய காலகட்டங்களில் புதிய கணக்கீட்டு கொள்கையை | அது செய்யப்பட்ட வருடத்தில் அனைத்து செலவுகளையும் கணக்கில் எடுத்துக்கொள்ள பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நடைமுறைப்படுத்தக்கூடிய ஆரம்ப திகதியிலிருந்து எதிர்பார்க்கும் வகையில் ஒப்பீட்டு தகவலை நிறுவனம் சீர்செய்யும். | |
| (உ) 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ரூபா 82.62 மில்லியன் மொத்தப் பெறுமதியைக் கொண்ட 11 பொருட்களின் கொள்வனவானது முறையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை மற்றும் மீளாய்வாண்டின் இறுதியின் போது கம்பனியின் முற்பணக் கணக்கின் கீழ் இருந்தது. | 2020 ஆம் ஆண்டில் 11 பொருட்களில் 03 பொருட்கள் தீர்க்கப்பட்டன. 2020 ஆம் ஆண்டில 03 பொருட்கள் மூலதனமாக்கப்பட்டுள்ளன. மீதி பொருட்களில் 90% எல்சீ கட்டணங்கள் மற்றும் ஜிஆர்என் பெறப்படவில்லை. | தொடர்புபட்ட கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் அனைத்து சொத்துகளும் மூலதனமாக்கப்படல் வேண்டும். |
| **(ஊ) வியாபார மற்றும் ஏனைய செலுத்தத்தக்க நிலுவைகள்** | | |
| (i) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 38.96 மில்லியன் பெறுமதியான 48 வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய வரவு நிலுவைகள் அரசாங்கத்தின் வழங்கல்கள், பெறுகை வழங்கல்கள் மற்றும் பொது பற்றுச்சீட்டு வழங்கல்கள் மற்றும் போக்குவரத்து விற்பனையாளர்கள் என்பனவற்றை உள்ளடக்கியதாக அவதானிக்கப்பட்டது. 2010 ஆம் ஆண்டு அல்லது அதற்கு முன்னரான ஆண்டுகளினது ரூபா 2.98 மில்லியன் மொத்தமாக கொண்ட 14 விற்பனையாளர்களையும் ஐந்து முதல் பத்து வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு ரூபா 0.55 மில்லியன் மொத்தமாகக் கொண்ட 03 விற்பனையாளர்களையும் ஒன்று முதல் ஐந்து வருட காலங்களுக்கு மேலாக ரூபா 35.42 மில்லியன் மொத்த வரவு மீதிகளும் தீர்க்கப்படாது இருந்தன என்பதை இது காட்டுகின்றது. கம்பனியானது நடைமுறையில் இருக்கும் வரவு நிலுவைகளைத் தீர்க்காது வரவு நிலுவைகளுடன் இருந்த விற்பனையாளர்களுடன் தொடர்ச்சியாகக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டிருந்தது என்பதைக் காட்டுகின்றது. எனவே போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காயவுச் சான்றுகள் இன்மையினால் அவ் வரவு மீதிகளின் உளதாம்தன்மை, துல்லியத்தன்மை மற்றும் மதிப்பீடு ஆகியவை உறுதிப்படுத்தப்படவில்லை. | வரவு விற்பனையாளர் நிலுவைகளில் பெரும்பாலனவை சப் (நுண்ணிய) இல் தவறாக செய்யப்பட்ட விலைப்பட்டியல் சரிபார்தலை அழிக்காமல் மாற்றியமைக்கின்றன | இணக்கம் செய்யப்படாத அனைத்து மீதிகளையும் முன்கூட்டியே தீர்க்க பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ii) 2010 ஆம் ஆண்டிலிருந்து அல்லது அதற்கு முன்னர் இருந்து 81 தரப்பினரின் ரூபா 7.18 மில்லியன் மொத்தமாக செலுத்த வேண்டிய நிலுவைகள் 5 முதல் 10 | நீண்ட காலமாக நிலுவையில் சில விற்பனையாளர் பொறுப்புக்கள் உள்ளன அவை இனி செலுத்தப்பட வேண்டியதில்லை இலங்கை நிதி அறிக்கையிடல் | இணக்கம் செய்யப்படாத அனைத்து மீதிகளையும் முன்கூட்டியே தீர்க்க பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| வருடங்களுக்கு மேல் செலுத்த வேண்டிய 310 நிலுவைகளின் மொத்த தொகையாக ரூபா 40.18 மில்லியன் நிலுவையும் ஒன்று முதல் ஐந்து வருடங்களுக்கு மேல் செலுத்தவேண்டிய ரூபா 39.45 மில்லியன் 18 செலுத்தப்படணேடிய நிலுவையும் மீளாய்வாண்டின் இறுதியில் தீர்க்கப்படாது இருந்தன. எவ்வாறிருப்பினும் போதியளவான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகள் இன்மையால் இந் நிலுவைகளின் துல்லியத்தன்மை, உளதாம்தன்மை மற்றும் மதிப்பீடு ஆகியவற்றை ஆய்வின் மூலம் உறுதிப்படுத்த முடியவில்லை. | நியமங்கள் (எஸ்எல்எப்ஆர்எஸ் 9) அல்லது ஐஎப்ஆர்எஸ் - 9, செலுத்தவேண்டிய எந்தவொரு கணக்கையும் பதிவழிப்பதற்கு முன்னர் பூர்த்தி செய்ய வேண்டிய வரையறை பட்டியலை வழங்குகின்றது. அந்த வழிகாட்டல்களின்படி செலுத்த வேண்டிய கடப்பாடு முடிவடையும்பொழுது, நீக்கப்படும்போது அல்லது செய்து முடிக்கப்படும்போது மட்டும் நிதிப்பொறுப்புக்களானவை கம்பனியால் அடையாளம் காணப்பட வேண்டும். எனவே ஒவ்வோர் கடன்பட்டோர் கணக்கின் குறித்த காலம் முடிவடைந்த பின் குறித்த கடன்பட்டோர் மீதிகளை மீண்டும் பதிவழிக்க நாங்கள் கணக்காய்வு முகாமைத்துவ<br><br>குழுவின் சிபாரிசுகளை பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம் | |
| (எ) மீளாய்வாண்டின் இறுதியில் ஐந்து வருடங்களுக்கு மேல் ரூபா 8.8 மில்லியன் பெறுமதியான ஏனைய பெறவேண்டியவைகள் மீட்டெடுக்கப்படவில்லை. எனவே போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகள் இன்மையால் இந் நிலுவைகளின் மீட்டெடுப்பானது கணக்காய்வில் உறுதிப்படுத்த முடியாதுள்ளது. | தவறாக உயர்த்தப்பட்ட விலைப்பட்டியல்கள், உயர்த்தப்பட்ட விலைப்பட்டியல்களில் உடன்பாடின்மை, விகிதங்கள் அல்லது நிலுவைத் தொகையை சேகரிக்க மேலும் தொடர எந்தவொரு சான்றும் இல்லாததால் ஏனைய வாடிக்கையாளர் நிலுவைகள் உள்ளன. இந்த நிலுவைகளில் பெரும்பாலனவை 2010 ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட எஸ்ஏபி முறைக்கு முன்பிருந்தே வந்துள்ளன தேவையான பரிந்துரைகளை பெறுவதற்காக இதை சீபிஎஸ்டிஎல்லின் கணக்காய்வு மற்றும் முகாமைத்து குழுவிற்கு நாங்கள் குறிப்பிட்டுள்ளோம், இது நீண்டகாலமாக நிலுவையில் உள்ளதால் இத் தொகையை மீளப்பெறுவதற்கு வாய்ப்பில்லையென கணக்காய்வு மற்றும் முகாமைத்து குழு பரிந்துரைத்துள்ளது. | நீண்டகால நிலுவைகளை மீளப்பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஏ) மீளாய்வாண்டின் இறுதியில் கம்பனி நிதிக்கூற்றுக்களில் மொத்தமாகச் செலுத்த வேண்டிய வருமான வரி, செலுத்த வேண்டிய பெறுமதி சேர் வரி (VAT) இசெலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல் வரி, செலுத்த வேண்டிய உழைக்கும் போதான வரி மற்றும் | ஐஆர்டி பதிவுகளின்படி அவர்கள் தங்கள் மதிப்பீடுகளின் பிரகாரம் முறைமையை இற்றைப்படுத்துகிறார்கள் அதேவேளை எமது நிதிக்கூற்றில் செலுத்தவேண்டிய | ஐஆர்டியுடன் அந்த வித்தியாசங்களை சீர்செய்ய பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பொருளாதார சேவைக் கட்டணம் ஆகியவற்றுக்கிடையே உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் பேணப்பட்ட பதிவுகளில் ரூபா 437.53 மில்லியன் வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | வரிபப்பொறுப்புகளும் அடங்கும், அவை அடுத்த மாதத்தில் செலுத்தவேண்டிய வரிபப்பொறுப்புகளும்,சுய மதிப்பீட்டு வருமான வரி கொடுப்பனவுகள் ஆகும். ஐஆர்டி எழுப்பிய கருத்து வேறுபாடுகளுக்கு எதிராக உள் நுழைந்த மேன்முறையீடுகள் எங்கள் நிதிஅறிக்கையில் கணக்கிடப்படவில்லை. | |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வரிகள் மற்றும் தீர்வைகளை மீள அறவிடுதல்**<br>எனது முன்னைய அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டது போன்று ரூபா 648 மில்லியன் கலால் வரியை உள்ளடக்குகின்ற ஏற்றுமதி சரக்குகளை வெளியேற்றுவதற்கு முன்னர் சுங்க வரி மற்றும் தீர்வையாக செலுத்தப்பட்ட ரூபா 1,617.2 மில்லியன் தொகையானது 2017 சனவரியிலிருந்து கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான கட்டணங்களினால் மீளப்பெற அல்லது தீர்க்கப்படிருக்கவில்லை. | தொகையை மீளப்பெறுவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன | தொகையை மீளப் பெறுவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| **(ஆ) தண்டப்பண கட்டணம்**<br>முன்னைய அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டது போன்று திறைசேரியிலிருந்தான மீள்வசக்கட்டல் அடிப்படையில் கப்பல் எரிபொருள் செயற்பாட்டுடன் தொடர்புடைய 2002 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையிலுள்ள தொகையினைத் தீர்ப்பதற்காக ரூபா 57.7 மில்லியன் தொகை ஒன்று செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும் இவ்வறிக்கை திகதி வரை இத்தொகை மீளவசக்கட்டப்பட்டிருக்கவில்லை. | இலங்கை சுங்கத்தின் நிலுவையாக காணப்படும் பொறுப்புக்களை இல்லாமல் செய்வதற்கு பொது திறைசேரியினுடைய அறிவுறுத்தலிற்கமைய ரூபா 57,736,913 கொடுப்பனவான நிலுவையை தீர்வு செய்ய சுங்க திணைக்களத்திற்கு மேற்கொள்ளப்பட்டது. 2014 இல் சிபிசி கொடுப்பனவு செய்திருந்தது. இவ்விடயம் தலையீட்டிற்காக பொதுத்திறைசேரிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | தொகையை முன்கூட்டியே மீள்செலுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் |

**1.6.2 செலுத்த வேண்டியவைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கிடைக்கப்பெற்ற உறுதிப்படுத்தல்களுக் கேற்ப, 2007 முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் எண்ணெய்ப் பெறுகைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட இழப்புக்காப்பு பரிவர்த்தனைகளுக்கு ஏற்ப மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தாபனமானது ரூபா 5,072.94 | இழப்புக்காப்பு பரிவர்த்தனை தொடர்பாக எந்தவொரு நிலுவைத்தொகையையும் சீபிசீக்கு எதிராக மக்கள்வங்கி வழக்கு தாக்கல் செய்யவில்லை. | மக்கள் வங்கியுடன் அரச நிறுவனமாக தீர்வு காண பொருத்தமான நடவடிக்கை எடுக்கவேண்டும் |

| | | |
|---|---|---|
| மில்லியன் இனை மக்கள் வங்கிக்கு செலுத்த வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும், இது கூட்டுத்தாபனத்தின் கணக்கிற்குக் கொண்டுவரப்படிருக்கவில்லை. | | |
| (ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக் கூற்றுக்களில் ரூபா 103.82 மில்லியன் தொகையானது நீண்ட காலமாகத் தீர்க்கப்படாது ‘‘ஆர்.எப். செயலற்ற, எச்.ஓ. செயலற்ற’’ எனும் அட்டுறு கணக்குகளின் கீழ் காட்டப்பட்டமை அவதானிக்கப்பட்டது. எனவே இந்த மீதிகளின் சரியான தன்மை மற்றும் உளதாம் தன்மை கணக்காய்வில் சந்தேகத்திற்குரியதாகும். | 2020 நிதியாண்டில் சரியான நிலுவைகளை பிரதிபலிக்க இந்த நிலுவைகளுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | இனங்காணப்படாத நிலுவைகளை தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் |
| (இ) ரூபா 143.47 மில்லியன் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை ஒன்று மீள் செலுத்தத்தக்க வைப்புக்களின் கீழ் காட்டப்பட்டதோடு 41 தொழிலாளர்களுடன் தொடர்புடைய ஏனையவைகள் பல வருடங்களாக தீர்க்கப்படாது இருந்தன. எவ்வாறிருப்பினும், நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருந்தமைக்கான காரணம் கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை. | 2020 நிதியாண்டில் தேவையான பதிவுகளை பதிந்து தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | தொகைகளை தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் |
| (ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் வியாபார மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளின் கீழ் ஐந்து வருடங்களுக்கு மேலாக 280.57 மில்லியன் ரூபா பெறுமதியான 239 வரவு மீதிகளும் 1 முதல் 5 வருடங்கள் வரையிலான ரூபா 3,443.44 மில்லியன் பெறுமதியான 369 வரவு மீதிகளும் தீரக்கப்படாமல் காணப்பட்டன. மேலும், நடைமுறையில் உள்ள நிலுவைகளைத் தீர்க்காத விற்பனையாளர்களுடன் கூட்டுத்தாபனமானது அடிக்கடி பரிவர்த்தனைகளை மேற்கொண்டிருப்பது அவதானிக்கப்பட்டது. எனவே, அந் நிலுவைகளின் துல்லியத் தன்மை மற்றும் உளதாம் தன்மை ஆகியவை கணக்காய்வில் கடுமையான சந்தேகத்திற்குரியதாக இருந்தது. | 239 வரவு நிலுவைகளில், 156 வரவு நிலுவைகளைக் கொண்ட விற்பனையாளர்கள் ரூபா 36.8 மில்லியன் அடுத்தடுத்த கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் செய்யப்படவில்லை | தொகைகளை தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் |
| (உ) கணக்காய்வுக்கு வழங்கப்பட்ட வயதுப்பகுப்பாய்வின்படி, மீளாய்வாண்டின் இறுதியில் வியாபார மற்றும் ஏனைய செலுத்தத்தக்கவைகளுடன் தொடர்புடைய ரூபா 37,089.11 மில்லியன் பெறுமதியான 297 விற்பனையாளர்களின் மீதிகள் 5 வருடங்களுக்கு மேலாகத் தீர்க்கப்படாமல் இருந்தன. எவ்வாறிருப்பினும், இந் நிலுவை மீதிகளைத் தீர்ப்பதற்கு கூட்டுத்தாபனமானது ஏதேனும் சாதகமான செயற்பாட்டை | 2020 நிதியாண்டில் சரியான நிலுவைகளை பிரதிபலிக்க இந்த நிலுவைகளுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | நிலுவையில் உள்ள மீதிகளை அகற்ற சாதகமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |

| | | |
|---|---|---|
| மேற்கொண்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. எனவே, கணக்காய்வில் இத்தகைய நிலுவைகளின் துல்லியத்தன்மை மற்றும் உளதாம்தன்மை ஆகியவை சந்தேகத்துக்குரியதாகவே இருந்தது. | | |
| (ஊ) 2013 ஆம் ஆண்டு பெற்றோலிய உற்பத்திகளின் கொள்வனவுடன் தொடர்புடைய ரூபா 32,343.52 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புடைய 250,925,169 அமெரிக்க டொலர்களை கூட்டுத்தாபனத்தினால் டெஹ்ரானில் அமைந்துள்ள ஈரான் தேசிய கூட்டுத்தாபனத்திற்கு வழங்க வேண்டியிருந்தது. வழங்கப்பட்ட தகவலின் படி, அத்தையை நிலுவை மீதிகளின் கட்டணமானது ஐக்கிய அமெரிக்காவினால் ஈரான் மீது விதிக்கப்பட்ட தடை காரணமாக நிறுத்தப்பட்டது. அத்தகைய மீதியானது ஒவ்வொரு வருட இறுதியிலும் நாணயமாற்று விகிதத்தில் ஆரம்பத்திலிருந்தே காட்டப்பட்டு வந்திருந்ததோடு சரி செய்யப்பட்ட தொகையின் வித்தியாசமானது உரிய வருடத்தின் நாணயமாற்று விகிதத்தின் இலாபம் அல்லது நட்டமாகப் பரிமாற்றப்பட்டது. அதன்படி மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தத்தக்க மீதியானது ரூபா 45,811.68 மில்லியனாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மேலும், கட்டுப்படுத்த முடியாத புறக் காரணிகளினால் தான் இந் நிலுவைகளின் கட்டணம் மேற்கொள்ளப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. எவ்வாறிருப்பினும், அமெரிகக் டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் படிப்படியான தேய்மானம் ஏற்பட்டிருந்த சூழல் ஒன்றில் கூட்டுத்தாபனமானது இத் தொகையைச் செலுத்துவதற்கு ஏதேனும் மாற்று வழிகளில் முயற்சிகளை மேற்கொண்டதா என்பதையும் மீதியைச் செலுத்தாது வைத்திருப்பதன் நிதிச் செயலாக்கத்தினை மதிப்பீடு செய்ததா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. மேலும், தடை உத்தரவு காரணமாக ஏற்பட்ட நிதியியல் தாக்கமானது தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | ஈரான் தேசிய கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை 250,925,169 அமெரிக்க டொலர் உருவாகிய காலத்திலிருந்து சீபிசீ இந்த தொகையை சட்ட வழிகள் மூலம் தீர்க்க அனைத்து முயற்சிகளையும் மேற்க்கொண்டது. அண்மைக்காலங்களில்கூட மத்தியவங்கி, வெளிநாட்டு அமைச்சு - இலங்கை உள்ளிட்ட பல நிறுவனங்களை பணம் செலுத்துவது எப்படி என்பது பற்றி சீபிசீ விசாரித்தது. இன்றுவரை ஈரானிய அரசாங்கம் இந்தக்கட்டணம் செலுத்துவதில் அக்கறை கொண்டிருப்பதால் இத் தொகையை செலுத்தடீவண்டியது நியாயமானது. இந்த நிலுவைத்தொகையை தீர்ப்பதற்கு பெருந்தோட்ட அமைச்சுடன் இணைந்து தற்போது ஒரு பொறிமுறை நிறுவப்பட்டுள்ளது என்பதே சான்று. | கூட்டுத்தாபனத்தால் இது தொடர்பான தொடர்புபட்ட கிரயம் மற்றும் பிற விளைவுகளை குறைக்க பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். |
| (எ) கூட்டுத்தாபனத்தின் கணக்கில் 2010 ஆம் ஆண்டில் இருந்த பிணக்குகளிற்கான ஏற்பாடுகளாக இருந்த ரூபா 2,500,000 பெறுமதியான மீதித் தொகையின் துல்லியத்தன்மையின் தெளிவின்மையானது சந்தேகத்திற்குரியதாக இருந்தது. | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை | முன்கூட்டியே அனைத்து இணக்கப்படாத நிலுவைகளை தீர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை- நல்லாளுகைக்கான வழிகாட்டல்கள் | | | |
| (i) | 4.3 ஆம் வழிகாட்டல் | சபைக்கூட்டம் முடிவடைந்து 10 நாட்களுக்குள் உறுதிப்படுத்தப்பட்ட சபை கூட்டக் குறிப்பானது வரிசை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | இது சாதாரண நடைமுறை இல்லை மற்றும் எதிர்காலத்தில் அனுப்ப ஏற்பாடு செய்யப்படும் | இது தொடர்புடைய வழிகாட்டலுடன் இணங்க வேண்டும் |
| (ii) | 5.2.2 ஆம் வழிகாட்டல் | மொத்தம் ரூபா 35,094.5 மில்லியன் பெறுமதியான மதிப்பீடு செய்யப்பட்ட 106 மூலதன கருத்திட்டங்களுக்கு முறையான சாத்தியப்பாட்டுக் கற்கைகள் ஏதுமின்றி மேற்கொள்ளப்பட்டன. | 2019 ஆண்டிற்கான பாதீட்டில் புதிய மூலதன விடயங்களுக்கான சாத்தியவளஆய்வு கற்கை உள்ளடக்கப்பட்டுள்ளது. | இது தொடர்புடைய வழிகாட்டலுடன் இணங்க வேண்டும் |
| (iii) | 5.2.4 மற்றும் 5.2.5 ஆம் வழிகாட்டல் | சபையால் அங்கீகரிக்கப்பட்ட இறுதியாகப் இற்றைப்படுத்தப்பட்ட பாதீட்டின் பிரதிகளானவை வரிசைஅமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், திறைசேரி, கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோரக்கு 2019 ஆம் ஆண்டு தொடங்குவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 வருடத்திற்கான பாதீடு 2018 ஆம் ஆண்டு செப்தெம்பர் 10 ஆம் திகதியன்று இயக்குனர் சபைக்கு முன்வைக்கப்பட்டது. அதன் பிரகாரம் வழிகாட்டல் பூர்திசெய்யப்பட்டுள்ளது. குறிப்பு – அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டை உரிய திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அமைச்சு மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2020 இற்கான பாதீடு 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 03 ஆம் திகதியில் சமர்ப்பிக்கப் பட்டிருந்தது. | இது தொடர்புடைய வழிகாட்டலுடன் இணங்கவேண்டும் |
| (iv) | 7.2ஆம் வழிகாட்டல் | கூட்டுத்தாபனத்தின் மசகு எண்ணெய் வியாபாரம், நிலக்கரி வியாபாரம், கப்பல் எரிபொருள் வியாபாரம் மற்றும் விவசாய இரசாயன வியாபாரம் போன்ற பாரிய செயற்பாடுகளை உள்ளடக்கிய செயற்பாட்டுக் கைநூலை கூட்டுத்தாபனம் தயாரித்திருக்கவில்லை. | தொழிநுட்பசேவைகள் மற்றும் கூட்டுத்தாபன விவகாரப் தொழிற்பாட்டு பகுதிகளால் நியம செயற்பாட்டு நடைமுறைகள் (எஸ்ஓபீ) உருவாக்கப்படுகின்றன. | இது தொடர்புடைய வழிகாட்டலுடன் இணங்கவேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| (v) | 9.3 ஆம் வழிகாட்டல் | வரிசை அமைச்சு, பொதுத் திறைசேரி, பொது முயற்சி திணைக்களங்களினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் பதவியுயர்வு திட்டங்களை கூட்டுத்தாபனம் கொண்டிருக்கவில்லை. | இது தற்போது மீளாய்வு செய்யும் செயற்பாட்டில் உள்ளது. | இது தொடர்புடைய வழிகாட்டலுடன் இணங்கவேண்டும் |
| (ஆ) | நிதி, திட்டமிடல் அமைச்சின் 1997 ஒக்டோபர் 24 ஆம் திகதிய 124 ஆம் இலக்க நிதிச்சுற்றறிக்கை. | ஒரு வெற்றிடமான பதவியின் பணிகளைக் கவனிக்கும் காலம் 03 மாதங்களாக மட்டுப் படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், மூன்று “A” தர பதவிகளை உள்ளடக்கிய பதவி வெற்றிடங்களின் கடமைகளை மேற்கொளவ்தற்காக எட்டு மாதங்களுக்கு மேலாக ஐந்து அலுவலர்கள் நியமிக்கப்பட்டு இருந்தார்கள். | 22 பதவிகளுக்கு உள்ளக விளம்பரங்கள் வழங்கப்பட்டுள்ளன மற்றும் பி 11 பதவிகளுக்குமுரிய விளம்பரங்கள் வழங்கப்படும். | இது தொடர்புடைய வழிகாட்டலுடன் இணங்கவேண்டும் |
| (இ) | 2013 நவம்பர் 04 ஆந் திகதிய எவ்பி/06/35/02/01ஆம் இலக்க மற்றும் 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய பிஈடீ 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள் | ஊழியர்களது ஆளுக்குரிய வேதனங்களிலிருந்து கழித்துக்கொள்ளாது அதன் ஊழியர்களின் மீளாய்வாண்டிற்கான ரூபா 173.3 மில்லியன் உழைக்கும் போதே செலுத்தும் வரியினை (PAYE) சீபிசீ தாங்கிக் கொண்டிருந்தது. | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித்திணைக்கள சட்டதின் பிரகாரம், உழைக்கும் போதே செலுத்தும் வரி தொகையை ஊழியர்களின் சம்பளத்தில் மேலதிக நன்மையாக உள்ளடக்கப்பட்டு கழிக்கப்படுகிறது. | இது தொடர்புடைய சுற்றறிக்கை ஏற்பாட்டுடன் இணங்க வேண்டும் |
| (ஈ) | கொள்ளல் வழிகாட்டல்கள் - 2006 இன் 4.2 ஆம் வழிகாட்டல் | கூட்டுத்தாபனத்தால் ஆகக்குறைந்தது 3 வருடங்களிற்கான பிரதான கொள்ளல் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்திருக்கவில்லை. | 2019 ஆண்டில் அரசாங்க கணக்காய்வால் மேற்கொண்ட விசாரணையின் பின்னர், இந்த ஆண்டு, 2020 முதல் நாட்டின் மூன்று ஆண்டுக்கான கேள்வியை எதிர்வுகூறும் ஒரு பிரதான கொள்ளல் திட்டத்தை சீபிசீ ஏற்கனவே தயாரித்துள்ளது. | இது தொடர்புடைய வழிகாட்டலுடன் இணங்கவேண்டும் |
| (உ) | நிதி ஒழுங்கு விதி 396 | தயாரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதங்களுக்குப் பின்னர் வழங்கப்படும் காசோலைகளானவை பழையதாகக் கருதப்படுவதோடு ஆரம்பக் கொடுக்கல் வாங்கலை மாற்றுதல் வேண்டும். எவ்வாறிருப்பினும், 67 காசோலைகள் அச்சிடப்பட்டன. ஆனால், ரூபா 2,776,064 பெறுமதியான காசோலைகள் மீளளிக்கப்படாது இருந்தன. | குறித்த பொறுப்புக்கள் சட்ட ரீதியான விடயங்களை கருத்திற்கொண்டு தீர்க்கப்பட்டன என்பதை நிரூபிக்கும் வகையில் சிபிசி சில காசோலைகளை கொடுக்கல் வாங்கல்களை மீளப்பெறாது பேணி வருகின்றது. சில வழங்கப்பட்ட காசோலைகளினுடைய உத்தியோத்தர் வந்து காசோலையினுடைய காலத்தினை நீடிக்க சந்தர்ப்பங்கள் உண்டு ஏனைய காசோலைகள் தொடர்ச்சியாக திருப்பப்பட்டன. | இது தொடர்புடைய கொள்கைகளுடன் இணங்கவேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 11,856.6 மில்லியன் தொகையான நட்டம் ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 106,140.404 மில்லியன் தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 94,283.804 மில்லியன் தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. வெளிநாட்டு நாணய மாற்று வீத செலவுகள் 110 சதவீதத்தால் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தமையே அதிகரிப்புக்கான பிரதான காரணமாகும்.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

கிடைக்கக்கூடியதாகவிருந்த தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான கூட்டுத்தாபனம் மற்றும் தொகுதியின் சில முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விகிதங்கள் | கூட்டுத்தாபனம் | | தொகுதி | |
|---|---|---|---|---|
| | 2019 | 2018 | 2019 | 2018 |
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | | | |
| மொத்த இலாப / நட்ட விகிதம் (ஜீபீ) (%) | 0.68 | (0.72) | (0.59) | (1.77) |
| செயற்பாட்டு இலாப / நட்ட விகிதம் (%) | (3.02) | (4.21) | (2.65) | (4.04) |
| தேறிய இலாப / நட்ட விகிதம் (என்பீ) (%) | (1.88) | (18.45) | (1.63) | (18.45) |
| **திரவத்தன்மை விகிதங்கள்** | | | | |
| நடைமுறைச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.47 | 0.44 | 0.48 | 0.45 |
| விரைவுச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 0.36 | 0.34 | 0.38 | 0.35 |
| **முதலீட்டு விகிதங்கள்** | | | | |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) (%) | -1 | 33.81 | -2.11 | 36.46 |

மீளாய்வாண்டில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கூட்டுத்தாபனத்தின் மொத்த இலாப விகிதம் மற்றும் செயற்பாட்டு இலாப விகிதம் முறையே 1.18 சதவீதம் மற்றும் 1.39 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நீண்டகாலமாக ஒர் ஒப்பந்தத்திற்கு வராது தொடர்ச்சியாக கூட்டுத்தாபனமானது ஒரு தனியார் கம்பனிக்கு திரவப் பெற்றோலிய எரிவாயுவினை வழங்கி இருக்கின்றது. | லிற்றோ காஸ் லங்கா லிமிடெட் ஏற்கனவே ஒப்பந்தம் ஒன்றிற்குள் நுழைந்தது. லாவ் காஸ் வரைவு வடிவத்தில் ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டு இம் மாதத்திற்குள் கையெழுத்திட்டப்பட்டுள்ளது | சீபிசீ தாமதமின்றி ஒப்பந்தங்களுக்கு நுழைய வேண்டும் |

| | | |
|---|---|---|
| (ஆ) சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடெட்டினால் (LIOC) அறிமுகப்படுத்தப்பட்ட தொழில் முயற்சி மூலவளத்திட்டமிடல் முறைமை (ERP) தலையீட்டுடன் தொடர்புடைய தமது பொறுப்புக்கள் தொடரப்பாக ஏதேனும் ஓர் ஒப்பந்தம் அல்லது அமைப்பு அகவிதியை கூட்டுத்தாபனம், சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்லிமிடட் (CPSTL) மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC) ஆகியவை கொண்டிருக்கவில்லை என்பதோடு விசேடமாக இம் முறைமையானது எரிபொருள் களஞ்சிய மீளாய்வு நடவடிக்கைகள் மற்றும் சுத்திகரிப்பு நிலைய செயற்பாடுகளுக்கு போதியளவில் பயன்படுத்தப்படவில்லை. | சிபிஎஸ்டிஎல் இனால் திரு மொஹமட் அலி சப்ரியின் ஆலோசனையுடன் தயாரிக்கப்பட்ட முத்தரப்பு ஒப்பந்தம் 2010 ஏப்ரல் 01 ஆம் திகதி ஈஆர்பி நேரலைக்கு முன் மூன்று தரப்பினரால் கையெழுத்திடப்பட வேண்டியிருந்த போதிலும் இதுவரை கையொப்பமிடப்படவில்லை. 2016 ஆம் ஆண்டில், மூன்று அமைப்புகளின் சட்ட அதிகாரிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அதிகாரிகள், எம்.பி.ஆர்.டி.யின் சட்ட அதிகாரி, திரு. நாதுன்பேரா / அமைச்சரின் சட்ட ஆலோசகர் ஒரு ஆலோசகராக பங்கேற்று ஒப்பந்தம் மீண்டும் தயாரிக்கப்பட்டது, அதே நேரத்தில் இயக்குநர் திரு. லலித் லியானகே இக்குழுக்கு சி.பி.எஸ்.டி.எல் தலைமை தாங்கினார். இறுதியாக, இது அமைச்சினூடாக ஏஜிஇன் அனுமதிக்கு எங்களுக்கு அறியத்தரப்பட்டது. அதன் பின்னர் எதுவும் நடைபெறவில்லை.<br>ஏப்ரல் 2019 இல், சிபிசி சபையானது சிபிசிக்கும் சிபிஎஸ்டிஎல் இற்கும் இடையில் இருதரப்பு ஒப்பந்தம் (சிபிஎஸ்டிஎல் இக் தொழிற்பாடானு எல்ஐஓசி இற்கு சென்று ஏதாவது முறைமை மாற்றியமைப்பு / புதிய அதிகரிப்பு / ஏனையவை போன்றவற்றிற்கு அனுமதி பெறுவதற்கு சிபிசி உறுப்பினர்களின் தேவையிருந்தமையினால்) ஒன்றினைத் தயாரிப்பதற்கும் கையொப்பமிடுவதற்கும் வழங்கிய வழிகாட்டலின்படி வரைவு ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு சிபிஎஸ்டிஎல் இற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. | சீபிசீ தாமதமின்றி தொடர்புபட்ட அனைத்த தரப்பினருடன் ஒப்பந்தங்களுக்கு நுழைய வேண்டும் |
| (இ) பின்வரும் அவதானிப்புக்களானவை பொதுப் பாவனையாளர் வசதிகள் குறித்து மேற்கொள்ளப்பட்டுள்ளன. | | |
| (i) இலங்கை அரசாங்கம் (GOSL), கூட்டுத்தாபனம் (CPC) மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC) ஆகியவற்றுக்கிடையே 2003 டிசம்பர் 30 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பொதுப் பாவனையாளர் வசதிகள் பங்குதாரர்களின் ஒப்பந்தமானது (GOSL/ CPC/LIOC) ஒப்பந்தத்தின் பதினைந்தாம் பிரிவின் விதிமுறைகளுக்கு ஏற்ப 2008 டிசம்பர் 31 | கணக்காய்வறிக்கையில் குறிப்பிட்டபடி சீபிஎஸ்டிஎல் உடன் சீபிசீ எவ்வித ஒப்பந்தத்திலும் கைசாத்திடப்படவில்லை. ஆகவே 2008 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் இல் காலவதியாகும் ஒப்பந்தம் எதுவம் இல்லை. | சீபிசீ தாமதமின்றி தொடர்புபட்ட அனைத்த தரப்பினருடன் ஒப்பந்தங்களுக்கு நுழைய வேண்டும் |

ஆம் திகதி காலாவதியானது. நிறுவனங்களின் ஆளுகை செயல்முறை மற்றும் உற்பத்தி செலவினைத் தீரம ானிக்கும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் விலையிடும் சூத்திரம் மற்றும் சிலப் (slab) கட்டணங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய போக்குவரத்துச் செலவுகள் என்பனவற்றை உள்ளடக்குகின்ற அத்தகைய ஒப்பந்தங்களின் கீழ் உள்வ ாங்கப்பட்ட பொதுப் பாவனையாளர் வசதிகளானவை; தொடர்புடைய எல்லாத் தரப்பினரதும் ஒப்பந்தத்துடன் புதுப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. (இறுதியாக 2011 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டது.)

(ii) 2019 மே 13 ஆம் திகதி லங்கா இந்தியன் ஒயில் கம்பனி இல்லாது கூட்டுத்தாபனமானது சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல்லிமிடட்டுடன் ஓர் ஒப்பந்தத்தை மேற்கொண்டிருந்தது. இவ் ஒப்பந்தத்தின்படி, பெற்றோலிய உற்பத்திகளின் களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்துடன் தொடர்புடைய விதிகளும் நிபந்தனைகளும் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இவ் ஒப்பந்தத்தின்படி, பெற்றோலிய உற்பத்திகளின் களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்துடன் தொடர்புடைய விதிகளும் நிபந்தனைகளும் மற்றும் பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் சிலோன் பெற்றோலிம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட் ஆகியவற்றுக்கு இடையே உற்பத்திகளைத் தீர்மானிக்கும் முறை ஆகியவை ஒப்புக் கொள்ளப்பட்டன. எவ்வாறா யினும் 2003 டிசம்பர் 30 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பொதுப் பாவனையாளர் வசதிகள் பங்குதாரர்களின் ஒப்பந்தத்தின் (GOSL/CPC/LIOC) பிரதான பங்குதாரர்களுள் ஒருவராக இருக்கக்கூடிய லங்கா இந்தியன் ஒயில் கம்பனிக்கு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய இதே விடயத்துடன் தொடர்பு டைய விதிகளும் நிபந்தனைகளும் வரையறை செய்யப்படவில்லை. எனவே, கூட்டுத்தாபனம் மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட் ஆகியவற்றுக்கு இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளை இந்தியன் ஒயில் கம்பனி ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் மறுக்கின்ற பொழுது கூட்டுதத்தாபனமானது சாதகமற்ற நிலைமைகளின் ஏதேனும் தாக்கம் மற்றும் செலவுகளை ஏற்க வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது.

சீபிஎஸ்ரிஎல்லுடன் பொதுவான பயனாளிகள் வசதி ஒப்பந்தத்தில் சீபிசீ கையெழுத்திடவில்லை. இந்த இரு நிறுவனங்களுக்குமிடையில் எந்த உடன்படிக்கையும் இல்லாததால் இரு நிறுவனங்களுக்குமிடையில் நடைமுறை பிரச்சினையை தீர்க்க இரு தரப்பினருக்கும் 2019 ஆம் ஆண்டில் ஒருவருக்கொருவர் உடன்படிக்கையில் கையெழுத்திட்டன.

சீபிசீ தாமதமின்றி தொடர்புபட்ட அனைத்த தரப்பினருடன் ஒப்பந்தங்களுக்கு நுழைய வேண்டும்

| | | |
|---|---|---|
| (iii) 2019 ஆம் ஆண்டு மே மாதம் 3 ஆம் திகதிய 43/1227 ஆம் இலக்க நிர்வாகக்குழு தீர்மானத்தின் படி 2019 ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் உற்பத்திக் கட்டணத்தினை அதிகரிப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டது. அதன் விளைவாக, 2019 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்திற்கு கூட்டுத்தாபனமானது ரூபா 173.77 மில்லியன் மேலதிகத் தொகையினைச் செலுத்த வேண்டியிருந்தது. | 1. 2019 ஆம் ஆண்டு மார்ச் 26 ஆம் திகதியன்று நடைபெற்ற உயர் அதிகாரிகளின் நிர்வாகக் கூட்டத்தில் முனைய (ரேர்மினல்) கட்டணத்தை அதிகரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.<br><br>2. சிபிஎஸ்டிஎல் இன் தலைவர் / 2019 மார்ச் 29 திகதியிட்ட கடிதத்தின் மூலம் சிபிஎஸ்டிஎல் இரண்டு சந்தைப்படுத்தல் நிறுவனங்களிடமிருந்து வசூலிக்கப்படும் முனையக் (ரேர்மினல்) கட்டணங்களை திருத்துவதற்கான சுழற்சி வாரியத் தாளை 2019 ஏப்ரல் 01 முதல் அமல்படுத்தியுள்ளார்.<br><br>3. 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 04 ஆம் திகதியன்று நடைபெற்ற கட்டணக் குழு கூட்டமும் இந்த விடயம் குறித்து விவாதித்தது.<br><br>4. மேற்கூறிய விடயங்களின்படி, 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 27% முனையக் கட்டணங்களை அதிகரிக்க சிபிசி சபையானது ஒப்புதல் அளித்துள்ளது | சீபிசீக்கு செலவை குறைப்பதற்கு முகாமையால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |
| (iv) 2003 டிசம்பர் 9 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட (GOSL/CPC/LIOC ஆகியவற்றுக்கிடையில்) ஒப்பந்தம் மற்றும் 2019 மே 13 ஆந் திகதி கூட்டுத்தாபனம் மற்றும் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடெட் ஆகியவற்றுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் என்பவற்றுக்கு ஏற்ப குழாய் அமைப்புகள் அல்லது குழாய் அமைப்புகளின் பகுதியினை ஏற்றுக் கொள்ளப்பட்ட தரநியமங்களுக்கு ஏற்ப பேணல் மற்றும் இரண்டு மாத காலத்திற்கான எரிபொருள் களஞ்சிய வசதிகளை வழங்குதல் என்பன சீபிஎஸ்டிஎல் இன் கடமையாகும். எவ்வாறாயினும் குழாய் அமைப்பில் அமைப்பில் உள்ள தடைகள் மற்றும் களஞ்சிய முறைமையின் வினைத்திறன் இன்மை காரணமாக கொள்கலன் ஒன்றில் இருந்து எரிபொருளை இறக்குவதில் ஏற்பட்ட தாமதத்தின் விளைவாக கூட்டுத்தாபனமானது தாமதக் கட்டணம் செலுத்துவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டது. அதன்படி மொத்தமாக 2,606,556 அமெரிக்க டொலர் தொகை ஒன்றினைச் செலுத்தி வந்ததோடு | சிபிசி ஏற்கனவே 2014 முதல் இன்றுவரை 2,606,555.72 அமெரிக்க டாலர் தொகையை செலுத்தியுள்ளது, அத்துடன் குழாய் இணைப்புகளை மோசமாக பராமரிப்பதன் காரணமாகவும், ஏற்றுக்கொள்ளப்பட்ட தரங்களுக்கு அமைவாக இல்லாத இரண்டு எஸ்.பி.பி.எம். மற்றும் குறைந்தது இரண்டு மாதங்களாவது நாட்டின் தேவையை பூர்த்தி செய்ய போதுமான சேமிப்பு வசதிகள் ஆகியவற்றினை வழங்காமை போன்றவற்றின் காரணமாக மேலும் (சராசரியாக 12,644,257 அமெரிக்க டொலர்) செலுத்த வேண்டியிருந்தது. | சீபிசீக்கு செலவை குறைப்பதற்கு முகாமையால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அத்தகைய செலவினை சேவை வழங்குனருக்கு மாற்றாமல் கடந்த 5 வருடங்களாக மொத்தமாக 12,644,257 அமெரிக்க டொலர்களைச் செலுத்தி வந்தது | | |
| (v) ஒப்பந்தத்தின்படி உற்பத்திச் செலவுகளானவை களஞ்சிய முனையச் செலவு மற்றும் இலாப எல்லை ஆகியவற்றை உள்ளடக்குவதோடு களஞ்சிய முனையச் செலவானது தனிப்பட்ட செலவு, மேந்தலை செலவு மற்றும் பராமரிப்பு செலவு மற்றும் CPSTL இன் சொத்துத் அடிப்படையிலான தேய்மானம் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட்டின் போக்குவரத்துக் கட்டணங்களானவை ஒப்புக்கொள்ளப்பட்ட உற்பத்திக் கட்டணங்களில் இருந்து வேறுபட்டது என இது குறிக்கின்றது. எவ்வாறாயினும், சிபிஎஸ்ரிஎல் இன் போக்குவரத்துடன் தொடர்புடைய செலவுகளானவை உற்பத்திக் கட்டணங்களின் களஞ்சிய முனையச் செலவினை தீர்மானிக்கும் போது தவிர்க்கப்பட்டுள்ளதா என்பதைக் கணக்காய்வின் மூலம் உறுதிப்படுத்த முடியவில்லை. அதன் விளைவாக சிபிஎஸ்ரிஎல் இன் போக்குவரத்துக் கட்டணங்களின் மீள் நிதியிடலானது நகல்செய்யப்படக் கூடும். கூட்டுத்தாபனத்தின் பதிவுகளின் படி மீளாய்வாண்டின் இறுதியில் சிபிஎஸ்ரிஎல் இற்கு செலுத்த வேண்டிய போக்குவரத்துக் கட்டணமாக ரூபா 2,247.2 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. | சிபிஎஸ்ரிஎல் நிறுவனத்திற்கு சொந்தமான பவுசர் பௌசரின் மொத்த செலவு சிபிஎஸ்ரிஎல் நிறுவனத்திடமிருந்து கோரப்பட்டது, மேலும் இந்த நகலை இல்லாமல் செய்ய ஏப்ரல் 2020 முதல் இன்றுவரை 5% செயல்திறன் கட்டணங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. ஆனால் சிபிஎஸ்டிஎல் சொந்த பவுசர்களில் மொத்த போக்குவரத்து கட்டணங்கள். | சீபிசீக்கு செலவை குறைப்பதற்கு முகாமையால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |
| (vi) 2003 டிசம்பர் 30 ஆம் திகதிய (GOSL/CPC/LIOC ஆகியவற்றுக்கிடையில்) ஒப்பந்தத்தின் வரைவிலக்கணத்தின் படி, களஞ்சிய முனையச் செலவானது “ (இ) வருடத்துக்கு 12 சதவீதம் என்ற வட்டி விகிதத்தின் அடிப்படையில் கம்பனியில் கடன் அளிக்கப்பட்டுள்ளதோடு களஞ்சிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்க ளின் ஒரு பகுதியை உருவாக்குதல் மற்றும் பணப்பற்றாக்குறைகளைத் தீர்ப்பதற்காக எடுக்கப்பட்ட மேலதிகக் கடன்கள் ” என்பதாகும். இவ் ஒப்பந்தமானது 2008 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்தது. எவ்வாறிருப்பினும், ஒப்பந்தம் முடிவடைந்ததன் பின்னர் சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடட்டினால் 2009 ஆம் ஆண்டு மக்கள் வங்கியிலிருந்து பெறப்பட்ட கடன்களுக்காக ரூபா 2,183 மில்லியனுக்கு மேற்பட்ட ஒரு வட்டித் தொகை 2009 முதல் 2016 வரையான காலப்பகுதி வரை | ஏற்றுக்கொள்ளப்பட்டது, ஆனால் ஒரு பரிகாரமாக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.<br>1. 2016 யூன் முதல் 2017 டிசம்பர் வரை ரூபா 1.173 மில்லியன் வட்டிக்கட்டணம் தக்க வைக்கப்பட்டுள்ளது.<br>2. 2018 ஆம் ஆண்டு சனவரி 01 ஆம் திகதியிலிருந்து ரேமினல் கட்டண வட்டி கூறுகளை மீளப்பெற தீர்மானம் செய்பட்டிருந்தது. | சீபிசீக்கு செலவை குறைப்பதற்கு முகாமையால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தில் செலுத்தப்பட்டது. அத்தகைய கட்டணமானது முறையான மதிப்பீடு இல்லாமலும் ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி செலுத்த வேண்டிய உண்மைத் தொகையினை உறுதிப்படுத்தாமலும் செலுத்தப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது. | | |
| (vii) ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநியமங்களுக்கு ஏற்ப குழாய் அமைப்புக்களை பராமரித்தலும் போதிய அளவிலான களஞ்சிய வசதிகளை வழங்குவதுமே துணை கம்பனியான சிபிஎஸ்ரிஎல் இன் பிரதான வகிபாகம் ஆகும். அதன்படி, நாட்டின் எரிபொருள் வழங்கலின் களஞ்சியப்படுத்தல் மற்றும் முனைய வசதிகளுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கென கட்டணமாக குறிப்பிடத்தக்க அளவு நிதி சிபிஎஸ்ரிஎல் இற்கு பரிமாற்றம் செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் சிபிஎஸ்ரிஎல் ஆனது ரூபா 1,029.1 மில்லியனை தேய்மானமாக அறவிட்டிருந்ததோடு கடந்த பத்து வருடங்களுக்கான தொகையானது ரூபா 10,085.52 மில்லியன் ஆகும். இதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் இறுதியின் போது சிபிஎஸ்ரிஎல் ஆல் இலாப எல்லையாக ரூபா 3,400.97 மில்லியன் அறவிடப்பட்டதோடு கடந்த பத்து வருடங்களாக சிபிசி மற்றும் எல்ஓஎல்சி ஆகியவற்றில் இருந்து அறவிடப்பட்ட மொத்தத் தொகையானது ரூபா 40,802.66 மில்லியன் ஆகும். எவ்வாறிருப்பினும் சிபிஎஸ்ரிஎல் ஆனது புதிய உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்காகவும் நடைமுறையிலுள்ள வசதிகளை பேணுவதற்காகவும் உடனடியாக ஏதேனும் சாதகமான நடவடிக்கையினை மேற்கொண்டுளள் தா என்பதைக் கணக்காய்வின் மூலம் உறுதிப்படுத்த முடியவில்லை. | தொடர்புபட்ட கருத்துரைகள் வழங்கப்படடிருக்கவில்லை | சீபிசீக்கு செலவை குறைப்பதற்கு முகாமையால் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |
| (ஈ) கடந்த வருட அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டது போன்று மீளாய்வாண்டின் இறுதியில் மொத்தமாக ரூபா 91,722 மில்லியன் நிலுவை மீதியைக் குறிக்கின்ற இலங்கை மின்சார சபை உள்ளிட்ட 13 பாரிய வாடிக்கையாளர்களுடன் எரிபொருள் வழங்கலுக்காக முறையான ஓர் ஒப்பந்தத்தைப் கொண்டிருக்கவில்லை. | சீபிசீ வரைவு ஒப்பந்தங்களை அந்தந்த தரப்பினருக்கு அனுப்ப ஏற்பாடுகளைச் செய்துள்ளதுடன், அத்தகைய ஒப்பந்தங்கள் முடிவடைந்த பின்னர் கைசாத்திடும் பணிகள் நடைபெற்று வருகின்றன. | கூட்டுத்தாபனம் பிரதான வாடிக்கையாளர்களுடன் முறையான ஒப்பந்தங்களை மேற்கொள் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) **இடர் குறைப்பு பரிவர்த்தனைகள்** 2007 முதல் 2009 வரையான காலப்பகுதியில் எண்ணெய் பெறுகை நடவடிக்கைகளுடன் தொடர்புடைய இழப்புக்காப்பு பரிவர்த்தனைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் | சீபிசீயின் இழப்புக்காப்பு பரிவர்த்தனைகளுக்கு எதிராக மக்கள் வங்கி எவ்வித நடவடிக்கையும் தொடங்கவில்லை. | இவ்விடயத்தை முன்கூட்டியே தீர்ப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

பரிசோதனையின் படி, 2019 டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது அப் பரிவர்த்தனைகளால் நாட்டுக்கு ஏற்பட்ட நட்டமானது ரூபா 14,028 மில்லியனாகும். மேலும் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக கொமர்ஷல் வங்கியானது 8,648,300 அமெரிக்க டொலர்களை உரிமை கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தது. அதற்கு மேலதிகமாக 27.8 மில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் வட்டியுடனான கூட்டுத்தொகை ஒன்று மக்கள் வங்கியின் கணக்குப் புத்தகங்களில் இழப்புக்காப்புடன் தொடர்புடைய பரிவர்த்தனைகளாக கூட்டுத்தாபனத்திடமிருந்து பெறப்பட வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தது.

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கூட்டுத்தாபனத்தின் மசகு எண்ணெய் (Lubricant) உற்பத்திகளின் விற்பனை செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை மற்றும் விற்பனைப் பெறுமானது படிப்படியாக வீழ்ச்சியடைந்துள்ளதாக அவதானிக்கப்பட்டது. இலங்கை பொதுப் பயன்னாடுகள் ஆணைக்குழுவின் பதிவுகளின் படி, மேலும் கூட்டுத்தாபனத்தின் இலங்கை மசகு எண்ணெய் சந்தையின் சந்தைப் பங்கு மற்றும் சந்தை இடமானது படிப்படியாக மோசமடைந்து இருந்தது. 2019 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டாகும் போது கூட்டுத்தாபனத்தின் சந்தை இடமானது ஐந்தாவது இடத்தில் இருந்து ஆறாவது இடத்திற்கு சென்றடைந்ததன் மூலம் மேலும் மோசமடைந்தது. எவ்வாறிருப்பினும், கூட்டுத்தாபனத்தின் மசகு எண்ணெய் விற்பனையின் நிகர வருமானமானது அதிகரித்திருந்தது. எனவே, கூட்டுத்தாபனத்தின் குறைந்த அளவு கவனம் செலுத்தப்பட்ட மசகு எண்ணெய் வணிகமானது இலங்கையில் இலாபகரமான வணிகமாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது. | மசகு எண்ணெய் விற்பனையளவு 2016 ல் இருந்து குறைந்துள்ளதுடன் சந்தை நிலைகள் 5 இலிருந்து 6 ஆக குறைந்துள்ள, அதே வேளை சந்தை பங்கை 6% இற்கும் குறைவாகப் பாதுகாத்தது. இருப்பினும், நாட்டின் மொத்த சந்தை அளவு மெதுவாக அதிகரித்துள்ளது.<br>சிபிசி மற்றும் எம் / எஸ் ஹைராக்ஸ் ஆயில் எஸ்.டி.என் பி.டி.க்கு இடையிலான ஒப்பந்தங்கள் காரணமாக ஏற்பட்ட குறித்த ஆண்டு முரண்பாடுகளால் இந்த விற்பனை அளவு ஏற்பட்டது. மேற்குறிப்பிட்ட கருத்து (1) இற்கு மேலதிகமாக தேறிய இலாப வீதமானது சிறிதளவு அதிகரித்திருந்தது.<br>சிபிசி விற்பனை செய்யும் மசகு எண்ணெய் தயாரிப்புகளுக்கான தேவை நிலவியது. ஒப்புதல் நடைமுறையில் இடையூறுகள் மற்றும் தாமதங்கள் காரணமாகவும் சிபிசி மற்றும் எம் / எஸ் ஹைராக்ஸ் ஆயில் எஸ்.டி.என்.பி.எச்.பி.டி.க்கு இடையிலான சர்ச்சைக்குரிய நிலை காரணமாகவும் தேவையான பொருட்கள் சந்தையில் விசுவாசமான வாடிக்கையாளர்களிற்கு கிடைக்கவில்லை. மசகு எண்ணெய் வணிகமானது முதலீடு மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான சிபிசியின் ஒரு முக்கிய பகுதியாகும் முகாமையானது ஒப்பந்தங்களின் சில பகுதிகளைக் கண்டறிந்த பின்னர், | மசகு எண்ணெய் (Lubricant) வியாபாரத்தை முன்னேற்ற பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

(ஆ)கூட்டுத்தாபனத்தினால் முகாமை செய்யப்படுகின்ற 1200 இற்கு மேற்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களைக் கொண்ட நாட்டில் எல்லா பாகங்களையும் உள்ளடக்கும் வகையில் அதிகூடிய விற்பனை வலையமைப்பு ஒன்றை கூட்டுத்தாபனம் கொண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக போக்குவரத்து வழி, விலையிடும் செயன்முறை, களஞ்சியக் கட்டுப்பாடு மற்றும் மசகு எண்ணெய் வணிகத்தின் (Lubricant) ஒட்டுமொத்த தொழிற்பாட்டின் மீதான மேற்பார்வை ஆகியவற்றைக் குறைந்தபட்ச முயற்சி மற்றும் செலவில் கூட்டுத்தாபனத்தின் நடைமுறையில் உள்ள நன்கு நிறுவப்பட்ட எரிபொருள் களஞ்சியம் மற்றும் விநியோக வலையமைப்பினூடாக இலகுவாக முகாமை செய்யலாம். அரசாங்க நிறுவனம் என்ற வகையில் கூட்டுத்தாபனமானது, மசகு உற்பத்திகளைப் பரவலாகப் பயன்படுத்தக் கூடிய முப்படைகள், இலங்கை பொலிஸ், மின்சார சபை, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை புகையிரத் திணைக்களம் போன்ற அரசாங்க நிறுவனங்களை உள்ளடக்கிய அரச முகவர்களுக்கு மசகு உற்பத்திகளை வழங்குவதற்கான அதி கூடிய சந்தர்ப்பங்களைக் கொண்டிருக்கின்றது. இலங்கையில் மசகு உற்பத்திகளின் களஞ்சியம் மற்றும் வழங்கலுடன் தொடர்புடைய எல்லா உட்கட்டமைப்பு வசதிகளையும் கூட்டுத்தாபனம் விருத்தி செய்து உள்ளது. மேலும், கூட்டுத்தாபனமானது 2016 மே மாதம் 6 ஆம் திகதியிலிருந்து 20

வருட காலத்திற்கான நிர்மாணம், செயற்பாடு மற்றும் பரிவர்த்தனை (BOT) எனும் அடிப்படையில் இலங்கையில் மசகு எண்ணை அறைக்கும் தொழிற்சாலை ஒன்றை நிர்மாணிப்பதற்கு ஹைராக்ஸ் ஒயில் எஸ்.டீ.என் பீ.எச்.டீ (HOSB) நிறுவனத்துடன் ஓர் ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது. மேலும், கூட்டுத்தாபனமானது (HOSB) உடன் குத்தகை ஒப்பந்தம் ஒன்றையும் வழங்கல் ஒப்பந்தம் ஒன்றையும் அதே தினத்தில் மேற்கொண்டது. (HOSB இல் இருந்து உற்பத்திகளைக் கொளவ்னவு செய்வதற்கு CEYPETCO பிராண்ட் பெயரில் மசகு எண்ணெய் தயாரிப்புகளை உற்பத்தி செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் முன்னர் அவற்றினை சரிசெய்ய விரும்பியது.

ஏப்ரல் 2020 இல், எம் / எஸ் ஹைராக்ஸால் கட்டப்பட்டு இயக்கப்படும் புதிய மசகு எண்ணெய் ஆலையில் வணிக உற்பத்தி மெதுவாக தொடங்கப்பட்டது. கோவிட் -19 தொற்றுநோய் தொடர்பான நிலைமை உற்பத்தி ஆலை ஊழியர்களின் வருகையை தாமதப்படுத்தியதுடன் ஆலை இயக்குநர் எம் / எஸ் ஹைராக்ஸின் படி மூலப்பொருள் விநியோக சங்கிலி இடையூறுகள் காரணமாக பல சிக்கல்கள் இருந்தன.

2020 ஆம் ஆண்டு யூலை முதல், பகுதி முகாமையாளர்களின் நேரடி மேற்பார்வையான மற்றும் தொடர்புடைய நேரடி மேற்பார்வையாளர்களின் கீழ் 1200 நிரப்பு நிலையங்கள் மூலம் மசகு எண்ணெய் விற்பனை செய்வதற்கான முகாமைத்துவ திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மேலும், இலங்கை சந்தையில் போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்காக புதிய கலப்பு தளத்தில் உற்பத்தி செய்யப்படும் சீபெட்கோ மசகு எண்ணெய் விலை கணிசமாகக் குறைக்கப்பட்டது. புதிய விலைகள் ஆகஸ்ட் 1, 2020 அன்று அறிவிக்கப்பட்டன, மேலும் ஸ்டாக்கிஸ்ட் நெட்வொர்க் சிபிசி நிரப்பு நிலையங்களுக்கு பொருட்களின் பற்றாக்குறை இல்லாமல் பொருட்களை வைத்திருக்க ஆர்வமாக இருந்தது.

,தற்கிடையில், அரசு நிறுவனங்கள் மற்றும் பிற அரசு நிறுவனங்களுக்கு 20% கார்ப்பரேட் தள்ளுபடி வழங்கப்பட்டது. இலங்கை இராணுவம், எஸ்.எல். கடற்படை, எஸ்.டி.எப், எஸ்.எல்.ரி.பி மற்றும் பிற அரசு நிறுவனங்கள் சி.பீ.சி உடன் சீபெட்கோ மசகு எண்ணெய் தயாரிப்புக்களினை வாங்குவதற்கு தற்போது தொடர்பு கொண்டிருக்கின்றன. சிபிசி தற்போது அதன் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளை மாதத்திற்கு 01 மசகு எண்ணெய் (Lubricant) வியாபாரத்தை வினைத்திறனாகவும் மற்றும் விளைதிறனாகவும் அதிகரிக்க பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| ஒத்துழைப்பதற்காக) மசகு தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டதோடு 2019 ஜூன் 24 ஆம் திகதி வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. எவ்வாறிருப்பினும், கூட்டுத்தாபனமானது நடைமுறைப்படுத்தக் கூடிய சாத்தியவள தந்திரோபாய வியாபாரத் திட்டம் ஒன்றுடன் செயற்பாடுகளைத் தொடங்கியதா என்பதனை கணக்காய்வின் மூலம் உறுதிப்படுத்த முடியவில்லை. | மில்லியன் லீற்றர் / கிலோவை அடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் மேற்கொண்டு வருகிறது, இது டிசம்பர் 2020 க்குள் சுமார் 20% சந்தைப் பங்கிற்கு ஒத்திருக்கும். | |
| (இ) பெறுகை செய்முறையைப் பூர்த்தி செய்வதில் குறிப்பிடத்தக்க தாமதம் ஒன்று அவதானிக்கப்பட்டது. அதன் விளைவாக விற்பனைப் பொருட்கள் நிலையத்தில் கையிருப்புப் பற்றாக்குறை சந்தையில் மசகு எண்ணெய் (Lubricant) மற்றும் எண்ணெய் கிறீஸ் பொருள் உற்பத்தியில் பற்றாக்குறை மற்றும் போட்டியிடும் நிறுவனங்களுகக் நுகர்வோரை ஈர்ப்பதற்கான சாத்தியக்கூறு ஆகிய அவதானிக்கப்பட்டன. | அமைச்சரவை கொள்ளல் குழுவின் பதிலால் அங்கீகாரத்தை அடைவதற்கான ஒப்பந்த் மேற்க்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கிடையில் சந்தை தேவைப்பாடுகளுக்கு இணங்க சிறிய கட்டளைகள் பிறப்பிக்கப்படுகின்றன. எம்எஸ் கைராக்ஸால் செயற்படுத்தப்படும் புதிய கலப்பு ஆலையில் மற்றைய அனைத்து மசகு எண்ணெய் (Lubricant) உற்பத்திகளும் உற்பத்தி செய்யப்படுவதால், கிறீஸ், பிறேக் ப்ளூயிட் மற்றும் கூலன்ட் ஆகிய வழங்கல்கள் சீபிசீ மூலம் எம்எஸ் கைராக்ஸால் இறக்குமதி செய்யப்படும். | பயனுறுதிமிக்க கொள்ளல் நடைமுறைக்க பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) முத்துராஜவெல முனையத்தில் அமைந்துள்ள பிரதான நிலையத்தை உள்ளடக்கிய 4 மசகு எண்ணை (Lubricant) நிலையங்கள் உள்ளன. எவ்வாறிருப்பினும், அந் நிலையங்களில் ஒவ்வொரு உற்பத்தியினதும் கையிருப்பு மட்டத்தினை உள்ளடக்கிய முறையான பதிவுகள் பேணப்படவில்லை. முறையற்ற கையிருப்புக் களஞ்சியங்கள், வெப்பநிலை போன்ற சூழல் காரணிகளை கருத்தில் கொள்ளாது களஞ்சியப்படுத்தல் மற்றும் விற்பனைப் பொருட்கள் நிலையங்களில் சேதமடைந்த மசகுப் பொருட்களின் கையிருப்பு என்பன கணக்காய்வு சோதனையின் போது அவதானிக்கப்பட்டன. மேலும் 2018 அக்டோபர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட உறுதிப்படுத்தலின் போது ரூபா 6 மில்லியனிற்கு மேலான கையிருப்பு நட்டத்தினை அடையாளங காண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சிபெட்கோ மசகு எண்ணை (Lubricant) உற்பத்திகளை களஞ்சியப்படுத்த சிபிசியால் பராமரிக்கப்படும் ஒரே ஒரு மசகு எண்ணை (Lubricant) களஞ்சியமே உள்ளது. நிரப்பு நிலையங்களில் கேள்விகளை வழங்குவதற்கு போதுமான இருப்புக்களை பராமரிக்க வேண்டும். முத்துராஜவெலவில் உள்ள சிபிசி களஞ்சியம் கட்டுப்படுத்தப்பட்ட வெப்பநிலையின் கீழ் பாதுகாப்பான களஞ்சிய வசதிகளுடன் வழங்கப்பட்டுள்ளது மற்றும் அதன் சுவர்களை சுற்றி கனரக தொழிற்துறை விசிறிகள் பொருத்தப்பட்டுள்ளன. ஊழியர்கள் திறமையான கையாளக்கூடிய சேமிப்பு பொருட்கள் மற்றும் நியமிக்கப்பட்ட சேமிப்பு விமானமும் பயன்பாட்டிலுள்ளது. இருப்பு இழப்பானது சேதமடைந்த இருப்புக்களினை சேர்த்தல் மீட்கப்பட்ட இருப்புக்கள் மற்றும் போக்குவரத்திலுள்ள பொருட்கள் என்பவற்றிலுள்ள பிரச்சினைகளால் | பொருத்தமான தகவல்கள் பராமரிக்கப்பட வேண்டும் மற்றும் இருப்பு சேதத்தை குறைக்கும் வகையில் இருப்பு கையாளப்பட வேண்டும் |

| | | |
|---|---|---|
| | ஏற்படுகின்றது. இது ஆய்வு செய்யபட்டு மீட்கப்பட்ட மற்றைய இருப்பு பொருட்கள் புதியகலவை ஆலைக்கு மறு வேலைக்காக அனுப்பப்ப:கின்றன. | |
| (உ) கடந்த வருட அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டது போன்று மீளாய்வாண்டின் இறுதியில் மொத்தமாக ரூபா 91,722 மில்லியன் நிலுவை மீதியைக் குறிக்கின்ற இலங்கை மின்சார சபை உள்ளிட்ட 13 பாரிய வாடிக்கையாளர்களுடன் எரிபொருள் வழங்கலுக்காக முறையான ஓர் ஒப்பந்தத்தைப் கொண்டிருக்கவில்லை. | சில ஒப்பந்தங்கள் வரைவு வடிவத்தில் உள்ளன இன்னமும் இறுதி செய்யப்படவில்லை மேலும் சில வாடிக்கையாளர்களின் கொடுப்பனவுகள் பொதுத்திறைசேரியினூடாக அனுப்பப்படுகின்றன. | பிரதான வாடிக்கையாளர்களுடன் முறைமையான உடன்படிக்கைக்குள் நுழைவதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். |
| (ஊ) **பெற்றோலிய உற்பத்திகளை களஞ்சியப்படுத்தல் மற்றும் விநியோகித்தல்**<br><br>தற்பொழுது இலங்கையில் பயன்படுத்தப்படுகின்ற நடைமுறையில் உள்ள பெற்றோலிய களஞ்சிய கொள்திறன் போதுமான தன்மையை மதிப்பீடு செய்து தற்பொழுது இலங்கையில் செயற்பாட்டில் உள்ள எரிபொருள் போக்குவரத்து குழாய் அமைப்பு முறைமையின் பொருத்தப்பாடு மற்றும் உற்பத்தித்திறன், புகையிரதம் மற்றும் பவுசர் வண்டிகளின் போக்குவரத்து முறைமை ஆகியவற்றை மதிப்பீடு செய்து நாட்டிலுள்ள பெற்றோலிய கட்டிடத் தொகுதி மற்றும் எரிபொருள் போக்குவரத்து ஆகியவற்றில் சுமூகமான மற்றும் பாதுகாப்பான செயற்பாட்டிற்குத் தேவையான நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்கின்றதுமான எனது விசேட அறிக்கையானது பாராளுமன்றத்தில் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது. தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் இதை பதிவிற்க்கம் செய்ய முடியும் | - | விசேட அறிக்கையில் செய்யப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த உடனடியாக கவனம் செலுத்த வேண்டும். |
| (எ) **திருகோணமலை தாங்கிப் பண்ணை**<br>திருகோணமலை தாங்கிப் பண்ணையில் 100 எண்ணெய்த் தாங்கிகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் 12,500 கன மீற்றர் (m3)(10,000MT) கொள்ளளவினைக் கொண்டுள்ளன. மற்றும் தொடர்புபட்ட ஏனைய வசதிகளானவை 1930 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்டன. தாங்கிப் பண்ணைக்கு சொந்தமான நிலப் பரப்பானது இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் இலங்கை அரசாங்கத்தினால் பிரித்தானிய அரசாங்கத்தின் Lord High Admiralty இன் ஆணையாளர்களுக்கு 999 வருடங்களுக்குக் | 1963 ஆண்டு டிசம்பர் மாதம் அல்லது அதற்கு மேற்ப்பட்ட காலப்பகுதியில் எண்ணெய் நிறுவல் வபாகத்திலுள்ள கட்டிடங்கள் மற்றும் உபகரணங்களின் நோக்கத்திற்காக அரசாங்கம் பிரித்தானிய அரசாங்கத்துடன் ஒரு ஒப்பந்தத்தில் 250,000 ஜிபிபி (GBP) காக கைச்சாத்திட்டது. இத்தொகை மூன்று தவணைக்கட்டணங்களாக சிபிசியால் செலுத்தப்பட்டிருந்தது.<br>இதுவரைகூட சிபிசி ஏதாவது உரிமைப்பத்திரத்தை கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | பண்ணையின் உரிமையை தெளிவுபடுத்தவும் மற்றும் பண்ணையில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி பெற்றோலியம் தொடர்பான தொழிலை தொடங்கவும் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும். |

குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. 1960 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்க கூட்டுத்தாபனமானது மூன்று தவணைகளில் 2,50,000 ஆயிரம் ஸ்ரேலிங் பவுணகளைள் செலுத்தியது. 1964 ஏப்ரல் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் காணி, எண்ணைத் தாங்கி கட்டிடங்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் மீதான உரிமையைப் பெற்றுக்கொண்டது. இருப்பினும் மேற்குறிப்பிடப்பட்ட நிலத்திற்காக இதுவரை அரசாங்கத்திடமிருந்து எந்த ஒரு சட்டரீதியான ஆவணமும் பெறப்படவில்லை. 2003 ஆம் ஆண்டு 35 வருட காலங்களுக்கு களஞ்சிய வசதிகள் மற்றும் நிலத்தினை எல்ஐஓசி கம்பனிக்கு குத்தகைக்கு விடுவதற்காக இலங்கை அரசாங்கத்திற்கும் எல்ஐஓசி கம்பனிக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதோடு ஒப்பந்தமானது ஒப்பந்த திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதாகவும் இருந்தது. கூட்டுத் தாபனமானது எந்தவொரு ஒப்பந்தத்தையும் மேற்கொள்ளவில்லை அல்லது தாங்கிகளைப் பயன்படுத்தவில்லை. எவ்வாறிருப்பினும் 2003 ஆம் ஆண்டிலிருந்து எல்ஐஓசி கம்பனியானது இச் சொத்துக்களைப் பயன்படுத்தி வருகின்றது

(ஏ) **களஞ்சிய மீளாய்வுக் குழு**

முன்னைய கணக்காய்வு அறிக்கையில் காணப்பட்டதை போன்று,கூட்டுத்தாபனம், சிபிஎஸ்ரீஎல், ஜேசீரீ ஒயில் வங்கி, மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி, இலங்கை மின்சார சபை (சீஈபி) மற்றும் வரிசை அமைச்சிலிருந்து உத்தியோகத்தரொருவர் என்பனவற்றிலிருந்து உறுப்பினர்களை உள்ளடக்கிய இருப்பு மீளாய்வுகுழு அதன் கூட்டங்களினை ஒவ்வொரு வாரமும் நடாத்துதல் வேண்டும். எவ்வாறாயினும், ஒவ்வொரு பெற்றோலியப் பொருட்களிலும் மீளகட்டளை மட்டம், அதி உத்தம மட்டம், இழிவு மட்டம் மற்றும் மீள கட்டளைக் கணியம் மற்றும் ஏனையவை, இருப்பு மட்டங்களுடன் தொடர்புடைய முறையான பதிவெடுகளினை கூட்டுத்தாபனம் பேணியிருக்கவில்லை. சிபிஎஸ்ரீஎல் இனால் சமர்ப்பிக்கப்பட்ட இருப்பு கணியவியல் பேணுகை அறிக்கையின் அடிப்படையில் மாத்திரம் பெற்றோலியப் பொருட்களின் கட்டளைக் கணியம் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் பெற்றோலியப் பொருட்களின் இருப்புக்களின் பேணுகை தொடர்பில் வேறு எவ்வித ஆவணங்களும் சிபிஎஸ்டிஎல்லால் சமர்ப்பித்த இருப்பு தொகை பராமரிக்கப்பட்ட அறிக்கைக்கு மேலதிகமாக எஸ்ஏபி முறைமையில் கிடைக்கும் இருப்பத் தரவுகளும் கடந்த மூன்று ஆண்டு காலப்பகுதியில் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் அத்துடன் விற்பனை புள்ளிவிபரங்கள் மற்றும் எல்ஐஓசியின் இருப்புக்கள் மெய்யாய்தல் தரவு சிபிசியின் சந்தைப்படுத்தல் முகாமையாளரால் வழங்கப்படுகின்றன. அவற்றின் இருப்பு போதுமானதாக இருக்கும் நாட்களில் சிபிசியால் நிதி வழங்கப்படுகின்றது.

கூட்டுத்தாபனத்தினால் இருப்புக்களினுடைய சரியான பதிவுகள் பராமரிக்கப்படவேண்டும்

இருப்பு மீளாய்வுக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
எவ்வாறாயினும், 2010 இல் எஸ்எபி முறைமையின் அறிமுகத்திலிருந்து, இருப்புத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கைகளினை வெளியிடுவதற்கு தரவுகளினை பிரித்தெடுப்பதற்கு கூட்டுத்தாபனத்தினால் முடியாததாகக் காணப்பட்டமை வெளிப்படுத்தப்பட்டது.

(ஐ) **சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்**
முன்னைய கணக்காய்வு அறிக்கையில் காணப்பட்டதைப் போன்று தற்போது காணப்படுகின்ற 47 வருடங்கள் வயதினுடைய சுத்திகரிப்புச் சாலை (1969 இல் ஆரம்பிக்கப்பட்டு) ஒரு அடிப்படையிலான சுத்திகரிப்பு சாலையாக காணப்படுகின்றதுடன் நாட்டில் பெற்றோலியப் பொருட்களுக்கு காணப்படும் அதிகரித்த கேள்வியினை பூர்த்தி செய்வதற்கு முடியாததாகக் காணப்படுகின்றதுடன், குறைந்த விலையில் பெற்றோலியப் பொருட்களினை வெளியிடுவதற்கு வசதிகள் உள்ளடங்கலாக உயர்தர தொழில்நுட்பங்களுடன் செயற்படுகின்ற மற்றும் சுத்திகரிப்பு செயற்பாட்டு வினைத்திறனை உத்தமப்படுத்துவதன் மூலம் பெற்றோல் மற்றும் டீசல் போன்ற தரம்குறைந்த பொருட்களினை உயர் பெறுமதியுடைய பொருட்களுக்கு மேம்படுத்துவதற்கான திறன்களினுடைய சுத்திகரிப்புச் சாலைகளுடன் ஒப்பிடும் போது இந்த சுத்திகரிப்புச் சாலை குறைந்த இலாபத்துடன் செயற்படுகின்றது.
எவ்வாறாயினும், கிரய வினைத்திறனான முறையொன்றில் சந்தைக்கு பெற்றோலியப் பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு முன்மொழியப்பட்ட சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்புச்சாலை விரிவாக்கல் மற்றும் நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் (எஸ்ஓஆர்ஈஎம்) சீபிசீ இனால் அமுல்படுத்த முடியாததாகக் காணப்பட்டது.
மேலும் 1003 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட காணியானது இவ்வறிக்கையினை மேற்கொள்ளும் திகதி வரையிலும் விளைவற்ற நிலையிலேயே உள்ளது.

சுத்திகரிப்பு நிலையத்தை உருவாக்க பல முதலீட்டாளர்கள் சிபிசி முகாமைத்துவத்தை அணுகினர் மற்றும் ஆனால் 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் இறுதி நடைமுறை முன்மொழிவுகள் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. திட்ட தாமதம் முற்றிலும் நிதி கிடைக்காத காரணமாகும்.
சொரம் (SOREM) திட்டத்திற்காக முன்னர் 35 ஏக்கர் காணி மற்றும் நாட்டின் தேவையை பூர்த்தி செய்ய ஒரு சுத்திகரிப்பு நிலையத்தை உருவாக்க ஒரு முதலீட்டாளரைத் தெரிவுசெய்யும் போது இந்நேரத்தில் விளைவற்று பயன்படுத்தபடலாம் என்று அடையாளம் காணப்பட்டது மற்றும் சொரம் (SOREM) திட்டத்துடன் ஒப்பிடும்போது தேவையான சுத்திகரிப்பு கொள்ளளவு இப்போது அதிகமாக இருப்பதால் இறுதி நடைமுறைப்படுத்தலுக்காக அதிக நிலங்களை கையகப்படுத்த வேண்டியிருக்கலாம்

தற்போதுள்ள சுத்திகரிப்பு நிலையத்தை மேம்படுத்துவதற்கும், நாட்டின் கேள்வியை மிகக்குறைந்த செலவில் பூர்த்தி செய்வதற்கும் புதிய கட்டமைப்பை உருவாக்குவதற்கு இது அதிக கவனம் செலுத்தப்படவேண்டும்

### 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) வனாத்தமுல்லையில் அமைந்துள்ள ஹல்கஹக்கும்புர காணி** | | |
| எல்பி கேஸ் செயற்திட்டம் மற்றும் விளையாட்டு மைதானமொன்றினை ஸ்தாபித்தல் நோக்கத்திற்கு ரூபா 10.6 மில்லியனுக்கு இந்தக் காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்தக் காணி குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்காததுடன் 700 கட்டுமானங்களுக்கு அதிகமாக அது ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. | நாங்கள் கூற்றுடன் உடன்படுகின்றோம். 700 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு வீடுகளை ஒதுக்கக்கூடிய நிலையில் சிபிசி இல்லை. அனைத்து குடியிருப்பாளர்களையும் வெளியேற்ற நீதவான் நீதிமன்றத்தில் நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால் வெளிற்றேத்தால் எழக்கூடிய சமூக தாக்கங்கள் காரணமாக தொடர்புபட்ட அமைச்சுக்களுடன் கலந்துரையாடுவதற்கு கௌரவ சட்டமா அதிபர் தகவல் அளித்துள்ளார் | குறிப்பிட்டதன்படி, அரசாங்க நில சட்டவிதிகளின்படி (உடைமை மீட்பு) அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்களை வெளியேற்ற நடவடிக்கை டிடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ) மஹன காணி** | | |
| கிடைக்கக்கூடிய கடிதத் தொடர்புகளின் பிரகாரம், அந்த நிலத்தினை ரூபா 0.625 மில்லியன் தொகையொன்றிற்கு சீபிசீ கொள்வனவு செய்திருந்ததுடன், அதற்குள் அது கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 1986 இல் கொள்வனவுக்குப் பின்னர் கூட முன்னைய உரிமையாளரினால் அந்த நிலம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | இந்த காணியின் பரப்பளவு 21.18 பேர்ச் ஆகும். இந்த நிலத்திலிருந்து 06 இடங்களை கொலன்னாவ பிரதேச செயலாளர் சிபிசிக்கு கையளித்துள்ளார். சிபிசிக்கு ஒப்படைப்பதற்காக கொலன்னாவ பிரதேச செயலாளர் ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுத்துள்ளார் | அங்கீகரிக்கப்படாத குடியிருப்பாளர்களை வெளியேற்றவும், சொத்துக்களை கூட்டுத்தாபனத்தின் மேம்பாட்டிற்காக பயன்படுத்தவும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் |